உதயம் 10 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்
ஏப்ரல் 2011

ஆசிரியர்:
Dr. S. ராம் மோஹன்

இணை ஆசிரியர்:
தியாகராஜன்

ஆலோசகர்கள்: ஏ.வி. சுப்ரமணியன், ஜா.ஜயராமன், சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டுச் சந்தா : ரூ. 75 தனி பிரதி : ரூ. 20

காசோலை/மணியார்டர் ரமண கேந்திரா டிரஸ்ட் என்ற பெயரில் எடுத்து 20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்பு அணுகவும்:
குமார் ராஜா : 9444261296
மின்னஞ்சல்: **arunamramanam@gmail.com**

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
**A.** குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்,
20, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமணகேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2011


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | **ஆசிரியர் உரை** | | 3 |
| 2 | **ஆனந்த தாண்டவம்** | முனைவர் மா. முருகேசன் | 15 |
| 3 | **செவியமுதம்** | வஸந்தா ராகவன் | 24 |
| 4 | **நாம் எதையும் முழுமையாகப் பார்ப்பதில்லை** | | 30 |
| 5 | **ரிபு கீதை** | தியாகராஜன் | 35 |
| 6 | **சிவானந்த லஹரி** | அ.வெ. சுகவனேஸ்வரன் | 40 |
| 7 | **திருமந்திரத்தில் நானார் விசாரம்** | ஜெ. ஜயராமன் | 46 |
| 8 | **உலகினைத் தானாய் உணர்தல் முக்தியாகும்** | | 48 |
| 9 | **இனிவரும் திருநாட்கள்** | | 54 |
| 10 | **நான் யார் தெரியுமா? துவக்கம் முதல் நான் யார் வரை** | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 55 |
| 11 | **தொண்டை மண்டலம் - ரமண தொண்டர் மண்டலம்** | ஆகுரா | 61 |
| 12 | **செய்திகள்** | | 73 |

## ஆசிரியர் உரை

# ஊனுக்குள் உறையும் உத்தமன்

மேலை நாட்டுச் சமயங்கள் இறைவனைத் தம்மிலிருந்து வேறுபட்டு வெளியே இருக்கும் இறைவனாக மட்டுமே (Transcendent God) கருதுகின்றன. இந்து சமயம் போன்ற கீழை நாட்டுச் சமயங்கள், பரம்பொருளைத் தமக்கு வெளியே அப்பாற்பட்டு உள்ள இறைவனாக மட்டுமல்லாது, பிரபஞ்ச எல்லையைக் கடந்துள்ள பரம்பொருளாக மட்டுமல்லாது, நமக்குள்ளே நமது ஆத்மாவாகவும் உறைபவன் அவனே எனக் கூறுகின்றன. பக்தர்கள் நான்கு வகை எனக் கூறும் கண்ணன் பக்தர்களை ஆர்த்தி, (துன்பத்தில் சிக்கியுள்ளவன்), அர்த்தார்த்தி (உலகப் பொருள்களை வேண்டி வழிபடுபவன், ஜிக்ஞாஸு (ஆத்ம விசாரணையில் ஈடுபடுபவன்), ஞானி என வகைப்படுத்துகிறார். இவர்களில் மூன்றாவது, நான்காவது வகையினரான ஜிக்ஞாஸுவும், ஞானியும் பரம்பொருளைத் தம்முள்ளே தேடியும் கண்டும் அனுபவிப்பவர்கள். அவர்களை விடுத்து, முதல் இரண்டு வகையினரான துன்பத்தில் உழல்பவர்கள், பொருள் வேண்டுபவர்கள் என்பவர்களை எடுத்துக் கொண்டால், பொருள் நாடுவதும் ஒரு துன்பமே! என்று கருதி, அவர்களை ஒன்று சேர்த்து விடலாமல்லாவா? இந்த வகையினர் வெளியே இறைவனைத் தேடிச் சென்று வழிபடுபவர்கள். இவர்களுக்குப் புரியும் பொருட்டே நம்மைக் காப்பாற்றும்

*இறைவன், நம்மிலிருந்து அப்பாற்பட்டு பிரபஞ்ச வெளியைத் தாண்டி பரமபதத்தில் அமர்ந்துள்ளான் என்று கூறி உள்ளனர் பெரியோர்கள்.*

*சிறையில் அடைப்பட்டு உள்ள ஒருவனை, அதே சிறையில் உள்ள வேறொருவன் எப்படி விடுதலை செய்ய முடியும்? துன்பத்தில் தவிப்பவனுக்கு துன்பத்தில் ஆழ்ந்துள்ள வேறு ஒருவன் எப்படி உதவி செய்ய முடியும்? வாழ்க்கைச் சுழலில் சிக்கித் தவிக்கும் உயிரினங்களைக் காப்பாற்ற அதே பிரபஞ்சச் சூழலில் சிக்கியுள்ள வேறு ஒருவனால் முடியுமா? எனவேதான், 'நம்மைக் காக்கும் ஆண்டவன் பிரபஞ்ச எல்லைகளைக் கடந்த ஒருவன், அவனைச் சரணடைவாய்!' என்று கூறினர். அந்த இறைவனிடம் சரண் அடைந்து பக்தி செய்யும்போது பக்தி பரபக்தியாகி முறுகிய நிலையில், என் துன்பம் நீங்க வேண்டும் என்ற ஆரம்ப நிலை ப்ரார்த்தனை போய்*

**'நன்றே செய்வாய்! பிழை செய்வாய்!**
**நானோ இதற்கு நாயகமே!'**

*என்ற பரிபூர்ண நிலைக்கு உயர்கிறான்.*

*'தரு துயரம் தடாயேல் உன் சரண் அல்லால் சரணில்லை என்று ஆழ்வார் கூறுமாற்றான், நீ துன்பமே தந்தாலும் சரி, நீதான் எனக்குச் சரண்' என்ற பக்குவத்தை அடைகிறான். அப்போது எல்லாப் பொருளையும் ஆண்டவனாகக் காண்கிறான். பரிணாம நிலையில், இறைவன் தமக்கு வெளியில் உள்ளான் என்பது போய் தமக்குள்ளே அந்தர்யாமியாக, ஆத்மாவாக உள்ளதை உணர்கிறான்.*

*நற்றிணை என்னும் சங்க நூலில் வருகின்ற மிக அழகிய, பொருள் புதைந்த ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது.*

**மாநிலம் சேவடியாக, தூநீர்**
**வளைநரல் பௌவம் உடுக்கையாக,**
**விசும்பு மெய்யாகத் திசை கையாகப்**
**பசுங்சுடர் மதியமொடு சுடர்க்கண்ணாக**
**இயன்ற எல்லாம் பயின்றுஅகத்து அடக்கிய**

**வேத முதல்வன் என்ப,**
**தீது அற விளங்கிய திகிரியோனே**

என்று பரம்பொருளைப் பற்றிப் பாடுகிறார் பெருந்தேவனார். இந்தப் பரம்பொருளுக்கு உலகங்கள் அனைத்தும் திருவடிகள், சங்குகள் நிரம்பிய பெரும் கடல்களே ஆடைகள். ஆகாயமே உடல், திசைகளே கைகள், ஞாயிறும், சந்திரனுமே கண்கள். உலகின் எல்லா உருவங்களின் ஊடே இறைவன் உறைந்து இயன்ற எல்லாம் பயின்று நிற்கிறான். இந்த நிலையையே அந்தர்யாமி, Immanent Self என்கிறோம். உலகத்திலுள்ள எல்லா உருவங்களிலேயும் Transcendant Reality ஆக உள்ள அந்தப் பரமாத்மா அவை எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கியுள்ளான். 'அகத்து அடக்கி' இதுவே சர்வ வியாபக நிலை Pervasive Omnipresence எனப்படும் நிலை.

ஒரு குடத்தை ஆற்றில் போடும்போது குடம் நீரால் நிரம்புகிறது. குடம் நீருக்குள் இருக்கிறது. அந்தக் குடத்தினுள்ளும் நீர் நிரம்பியுள்ளது. குடத்துக்குள் நீரும், நீருக்குள் குடமும் இருக்கின்றன. அதே போன்று பகவானும் இயன்ற (தான் உருவாக்கிய) எல்லாவற்றிலும் பயின்று உறைகின்றான், அதே சமயம் எல்லாவற்றையும் தன் அகத்தே அடக்கி வைத்துள்ளான்.

இந்த சர்வ வியாபக, அந்தர்யாமி நிலைகள் இரண்டுமாக, 'பரம்பொருள்' இலங்குவதை பகவான் அருணாசல பதிகம் ஏழாவது பாடலில் கூறுகிறார்.

**"வெளிவளி தீநீர் மண்பல உயிரா**
**விரிவுறு பூத பௌதிகங்கள்**
**வெளிஒளி உன்னை அன்றி இன்று என்னின்**
**வேறுயான் ஆருளன் விமலா**
**வெளியதாய் உளத்தே வேறு அற விளங்கின்**
**வேறு என வெளிப்படுவேன் ஆர்**
**வெளிவராய் அருணாசலா அவன் தலையில்**
**விரிமலர்ப் பதத்தினை வைத்தே!"**

எங்கும் பரந்து நிறைந்திருக்கும் ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களும் அவற்றின்

*கலப்பால் தோன்றிய பௌதீகத் தோற்றங்களும் பல விதமான ஜீவராஸிகளும் சிதாகாச ரூபனான உன்னையன்றி வேறு ஒன்றுமே இல்லை. அப்படி இருக்கும்போது உனக்கு வேறாக நான் ஒருவன் மட்டும் எப்படி இருக்க முடியும்? என் உள்ளத்தில் ஆத்மாவாக, நான், நான் என இரண்டற்று அபேதமாக நீ பிரகாசித்துக் கொண்டிருக்கும் போது அந்நியமாக நான் என்று (அஹங்காரமாக) எழுகின்றேனே, அந்த 'நான் யார்'? 'அந்த அஹங்காரத்தின் மேல் உனது விரிந்த மலர்ப் பாதத்தை வைத்து அருணாசலா நீ வெளிப்பட்டு வருவாய்!' என்று பிரார்த்திக்கிறார் பகவான்.*

*எல்லாமாக நீயே இருக்கும்போது உன்னை அறியாமல், எப்படி ஒருவன் தனித்து, வெளி வரமுடியும்? எல்லாமே உன் விளையாட்டுதான் என்கிறார் பகவான்.*

***'ஒருவனாம் உன்னை ஒளித்து எவர் வருவார்***
***உன்சூதே இது, அருணாசலா!'***
***(அக்ஷரமணமாலை 12)***

*குருவின் திருப்பாதம், சாதகன் தலைமீது வைக்க வேண்டும். பகவானது, குரு யார்? அருணாசலனே! அவர்தம் குரு, எனவே,*

*'தலையில் விரிமலர்ப் பாதம் வை!'*

*எனக் குறிப்பிடுகிறார். இந்தக் குருபாத ஸ்பரிச சிறப்பை மணிவாசகர்,*

**'குருவடிவாகிக் குவலம் தன்னில்**
**திருவடிவைத்துத் திறம் இது பொருள்!'**

*எனக் குறிப்பிடுகிறார்.*

*குருவின் திருப்பாதங்களை நம் தலையில், உள்ளத்தில் தாங்கும்போது, குருவின் திருவருள் நம்மை அஞ்ஞான மையல், ஆசை, அகந்தை வலைகளில் சிக்காமல் பாதுகாக்கிறது.*

***"கூர்வாள் கண்ணியர் கொடுமையில் படாதுஅருள்***
***கூர்ந்து எனைச் சேர்ந்தருள் அருணாசலா!"***
***(அக்ஷரமணமாலை 29)***

*உலகில் கவர்ச்சிமிக்க விஷயங்கள் நம்மை மாய வலையில் சிக்க வைத்து பின்னர் நமது துன்பத்திற்குக் காரணமாகின்றன. அவற்றிடம் சிக்கி விடாமல் எனது குருவாகிய உனது அருள் என்னைக் காப்பதாக! என வேண்டுகிறார் பகவான்.*

*(தமது வாக்கு வன்மையால் பிறரை ஈர்த்து ஆட்படுத்தி, பின்னர் அவரைப் புறம் போக விடாது துன்பத்தில் ஆழ்த்தும் போலி குருமார்கள் நிரம்பி வரும் இக்காலத்திற்குப் பகவானின் இந்தப் பிரார்த்தினை பொருந்தும்.)*

*குருவின் திருவருள் நமக்கு மயல் வலைகளை நீக்கி ஞானக் கலையைத் தருகிறது. அந்தத் திருவருள் துணை வரும் போது நமது அச்சம் நீங்குகிறது. பகவான் உள்ளது நாற்பது அநுபந்தத்தில் (26, 27 பாடல்கள்) கூறுவது போல், உலகில் அச்சமின்றி ஆனந்தத்துடன் விளையாடும் மனப்பாங்கு சித்திக்கிறது. உலகமே இன்பமயமாகிறது. உலகம் அவரவர் மனப்பரிமாணத்திற்கேற்ப ஆனந்தமாகவோ, துன்ப வடிவமாகவோ காட்சி அளிக்கிறது.*

*எனக்கு ஒரு சீனக் கதை ஞாபகத்திற்கு வருகிறது. அது உலகில் கண்ணாடிகள் தோன்றாத காலம். யாருமே தத்தம் முகத்தைக் கண்ணாடியில் பார்த்திருக்க மாட்டார்கள். தம் முகம் எப்படித் தோற்றம் அளிக்கிறது என்று யாரும் அறிந்ததில்லை. அப்போது முதல்முதலாக கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டது. ஒருவனுக்கு ஒரு கண்ணாடி கிடைத்தது. ஆயினும் அது என்ன என்று அவன் அறிந்திருக்கவில்லை. அதை ஒரு பெட்டியில் வைத்துக் கொடுத்தனர். அதை வாங்கிய பின் அதைத் திறந்து பார்த்தான். அதில் அவன் முகம் தெரிகிறது. தன் முகம்தான் அது என்று அவன் அறிந்திருக்கவில்லை. இதற்குள் ஒரு மனிதன் இருக்கிறான், இந்தப் பெட்டிக்குள்ளே ஆனந்தமாக வசிக்கும் இவன் ஒரு தேவனாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கண்ணாடியைப்*

பெட்டிக்குள் வைத்துப் பூட்டித் தன் அறைக்குள் வைத்துக் கொண்டான். தினந்தோறும் காலையில் எழுந்து தன் மனைவிக்குத் தெரியாமல் தன் அறைக்குள் நுழைந்து, பெட்டியைத் திறந்து கண்ணாடியைப் பார்ப்பது, மனைவி வந்து விட்டால், பெட்டியை மூடி விடுவது என்று வழக்கப்படுத்திக் கொண்டிருந்தான்.

அவன் செய்கைகளைப் பார்த்த மனைவிக்கு சந்தேகம் வந்தது. எதை இப்படிப் பெட்டிக்குள் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறான் என அறியும் ஆவல் வந்தது. ஒரு நாள் கணவன் வீட்டில் இல்லாத போது பெட்டியை வேறு சாவி போட்டு திறந்து பார்த்தாள். உள்ளே இருந்த கண்ணாடியில் அவள் முகம் தெரிந்தது. அதுவரை கண்ணாடியைப் பார்த்திராதலால் அது தன்னுடைய முகம்தான் என்று அவளுக்கும் தெரிந்திருக்கவில்லை. நம் கணவன் தனக்குத் தெரியாமல் யாரோ ஒரு பெண்ணைப் பெட்டியில் ஒளித்து வைத்துள்ளான் என்று எண்ணி, கடும் கோபம் கொண்டாள்.

கணவனுக்காக கோபத்துடன் அவள் காத்திருந்த போது, கணவன் ஒரு புத்தபிட்சுவை உடன் அழைத்து வந்திருந்தான். கணவனுடன் மனைவி தீவிரமான யுத்தத்தைத் தொடங்கியவுடன் "ஏன் இப்படிக் கோபிக்கிறாய்?" என்று பிட்சு வினவினார். "ஸ்வாமி, நான் குத்துக் கல்லாட்டம் வீட்டில் இருக்கும்போது இவர் வேறு பெண்ணை அழைத்து வந்து தனது அறையில் உள்ள பெட்டியில் ஒளித்து வைத்து இருக்கிறார்!" என்றாள் அவள். "ஏன் அப்பா அப்படிச் செய்கிறாய்?" என்று வினவிய பிட்சுவிடம், "ஐயோ! இவளைத் தவிர வேறு பெண்ணையே நான் பார்த்ததில்லையே!" என்று பரிதாபமாக விடை கூறினான் கணவன். பொய்யா சொல்கிறீர்கள், ஸ்வாமி! இதோ உங்களுக்கு நிருபிக்கிறேன். இவர் ஓர் அழகிய இளம் பெண்ணை ஒளித்து வைத்து இருப்பதை!" என்று கூறி பிட்சுவை கண்ணாடி வைத்திருக்கும் பெட்டியை திறந்து

*பார்க்கும்படி கூறினாள். பிட்சு அதைத் திறந்து பார்த்தார். கண்ணாடியில் அவர் முகம் தெரிந்தது. இது வரை அவரும் கண்ணாடியில் தன் முகத்தைக் கண்டதில்லை அல்லவா? அவர் கூவினார் "இதோ பாருங்கள்! எல்லோருக்கும் தன் ரகசியம் வெளிப்பட்டுவிட்டதே என்று எண்ணி வெட்கித் தன் தலையை இந்தப் பெண் மொட்டையடித்துக் கொண்டுவிட்டாள். இனி மேல் இங்கிருந்தால் அவமானம் தாங்காது அவள் போய் விடுவாள்" என்றார்.*

*"எண்ணங்கள் யாவினும் யானெனும் எண்ணமே மூலமாம்" என்று பகவான் கூறுவது போல அவரவர் பார்க்கிறபோது வெவ்வேறு முகம் கண்ணாடியில் தோன்றியது, அந்தத் தோற்றத்துக் காரணம் கண்ணாடியிலா இருக்கிறது? பார்ப்பவரிடம் அல்லவா இருக்கிறது.*

*இன்பம், துன்பம் என்பது அவரவர் மனப் பக்குவத்தைப் பற்றி அமைகிறது. மனப்பக்குவம் இல்லாதவர்கள் எத்தகைய வளம் வாய்க்கப் பெறினும் அவதி உறுகிறார்கள். மன உயர்வு பெற்றவர்கள் எத்தகைய கடினமான சூழ்நிலையில் இருப்பினும் ஆனந்தமயமாகவே இருப்பர். மணிவாசகர் "இறைவா! உனது திருவருள் துணை இருக்குமானால் நரகத்திலும் ஆனந்தமாக இருப்பேன்!" என்கிறார்.*

*"நரகம் புகினும் இறைவா! எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின் இறைவா!"*

*இத்தகைய பரமானந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர் பகவான். அண்ணாமலை வீதிகளில் தனது ஆரம்பகால பிட்சை வாழ்க்கையைப் பற்றிக் கூறுமிடத்து "ஒருவர் வீட்டு வாசலில் இருந்து கைதட்டுவேன். அவர்கள் எதனை என் கையில் போட்டாலும் அதை அப்படியே விழுங்கிவிட்டு, கையை அப்படியே தலையில் துடைத்துக் கொண்டு சென்று விடுவேன். அப்போது ஓர் அரசனைப் போலவே உணர்ந்தேன்". பின்னர் விருபாட்சிகுகை போன்ற இடங்களில் இருந்தபோது, "பக்தர்கள் தெருக்களில் இரந்து*

*கொண்டு வரும் சிறிது அளவு உணவு அனைவருக்கும் போதாது. எனவே, அதில் நிறையத் தண்ணீர் ஊற்றிக் கரைத்து, உப்பு, எலுமிச்சை இலை போன்றவற்றைப் போட்டு, ஒவ்வொருவரும் ஒரு குவளை பருகுவோம். அதுவே எமக்குத் தேவாமிர்தமாக இருந்தது" என்கிறார் பகவான்.*

*இறைவன் திருவருளை நாடாத உனக்குச் சிறு துன்பம் வரினும் அது மலை போலத் தெரியும். குருவருளால் ஞானம் பெற்றவர்க்கு மலை போன்ற துன்பம் வந்தாலும் அவை பொடியாய்ப் போகின்றன. இதை அலங்காரத்தில் அருணகிரி அழகுற உரைக்கிறார்.*

***"பொட்டாக வெற்பைப் பொருத கந்தா!***
***தப்பிப் போனது ஒன்றற்கு***
***எட்டாத ஞான கலைதருவாய்;***
***இரும் காமவிடாய்ப்***
***பட்டார் உயிரைத் திருகிப் பருகிப்***
***பசி தணிக்கும்***
***கட்டாரி வேல்வழியார் வலைக்கே***
***மனம் கட்டுண்டதே!"***

*மலை போன்ற நமது சஞ்சித, ஆகாமிய கர்ம வினைகளை பொட்டு பொட்டாக ஆக்கும் ஆற்றல் குருவருளுக்கு உண்டு. நான் நினைத்துக் கொண்டிருந்தேன், என்கைக்கு என் மனம் அகப்பட்டால் அதைப் பிடித்து அழித்து, அதை குருவின் திருவடியில் சமர்ப்பித்து, ஞானம் பெறலாம். அப்படிச் செய்ய முடிந்திருந்தால் இந்த அஹங்காரம் பொடியாக ஆகி அழிந்திருக்கும். ஆனால் என் மனம் கைக்கு அகப்படாமல் தப்பி ஓடிவிட்டதே! என்னுடைய முயற்சி, ஆற்றல் ஒன்றுமே பலிக்கவில்லை. எனவே எனக்கு ஞானநிலை உனது அருளால் மட்டுமே கிடைக்க முடியும். அதையே நான் உன்னிடம் பிரார்த்திக்கிறேன்.*

***"தப்பிப் போனது ஒன்றற்கு***
***எட்டாத ஞானக் கலை தருவாய்"***

*தப்பிப் போன மனம் சும்மாவா இருக்கிறது? அது போய் ஆசை வலைக்குள் சிக்கிக் கொண்டது! பகவான்*

அக்ஷரமணமாலையில் கூர்வாட் கண்ணியர் கொடுமை என்று குறிப்பிடுவது இதனையே. "பட்டார் உயிரைத் திருகிப் பருகிப் பசி தணிக்கும் கட்டாரி வேல் விழியார்" என்று அருணகிரியார் குறிப்பிடுவதும் இதைத்தான். இந்தக கூர்வாள் கண்ணியர் கொடுமைபடாதிருக்க வேண்டுமெனில், குருவின் திருவருள் தான் உதவி புரியும்.

இந்தத் திருவருள் பெற நாம் தகுதி பெற வேண்டுமெனில், நல்ல முறையில் நாம் முயற்சி செய்ய வேண்டும். ஆன்ம சாதனை தொடங்க வேண்டும் என்ற எண்ணம் வந்தாலே போதும், இறையருள் தானே வந்து வெளிப்படும். நாம் இது வரை ஆடி வந்த ஊன நாடகத்தைக் கைவிட்டு ஞான நாடகத்தைத் தொடங்கி விட்டால் அது நிறைவேறும் வரை நில்லாது, இறையருள் வெள்ளம் வந்து பாய்ந்து செல்லும் வேகமாக பாய்ந்து வரும் நதியில் ஒன்றைப் போட்டால் இடையில் சிறிது தடை ஏற்பட்டாலும், ஆற்றின் வேகத்தால் உந்தப் பட்டு எப்படியும் கடலில் போய்ச் சேர்ந்து விடும். அப்படியே இறைவனது திருவருளைப் பெறும் முயற்சியை ஆரம்பித்தாலே போதும், இறையருள் பாய்ந்து வரும். நம்மை பரம் பொருளில் கொண்டு சேர்த்து விடும்

**"கடலெழு எழிலியில் பொழிதரும் நீர்தான்**
**கடல்நிலை அடைவரை தடைசெயின் நில்லாது**
**உடல் உயிர் உனில் எழும் உனை உறுவரையில்**
**உறு பல வழிகளில் உழலினும் நில்லாது"**
***(அருணாசல அஷ்டகம் 6)***

சிறிய முயற்சியாயினும், 'தனது குழந்தை முயற்சி செய்கின்றதே' என்று குழந்தையைத் தாய் தட்டிக் கொடுத்து ஊக்குவிக்கிறாள் அல்லவா! அதைப் போன்று சிறு முயற்சி செய்தாலும் இறைவன் சாதகனை ஊக்குவிக்கிறான்.

திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் ஒரு புலவனுக்கு முருகனை அடைய வழிகாட்டுவது போல் பாடி உள்ளார். 'நான் எப்படி இறைவனை அடைவது, எப்போது அவனைச் சென்று அடைய முடியும், செல்லும் வழி

*மிக நீண்ட வழியா?' என்று கேட்ட புலவனுக்கு நக்கீரர் விடை கூறுகிறார். 'புலவனே! நீ உடனே அவனைக் காண்பாய். எப்போது அவனைக் காண வேண்டும் என்ற பேராவலுடன் புறப்பட்டாயோ! அதுவே உன்னை விரைவாக இறைவனிடம் அழைத்துச் செல்லும். எதை எதையோ சதமென எண்ணி, ஊன நாடகம் ஆடிக்கொண்டிருந்த நீ இறைவனைக் காண வேண்டும் என்று எதிர்த் திசையில் திரும்பியதே போதும். இறைவன் திருவருள் உனக்குக் கிடைக்கும். இன்றே கிடைக்கும். இப்பொழுதே கிடைக்கும்" என்று உறுதி கூறுகிறார்.*

**"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு**
**நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும்**
**செலவு நீ நயந்தனை ஆயின், பலவுடன்**
**நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப**
**இன்னே பெறுதி, நீ முன்னிய வினையே!"**

**'அத்ர ப்ரஹ்ம ஸமஸ்நுதே'**

*"ப்ரம்மத்தை இங்கே, இப்பொழுதே அடைவாய்!" என்று யமன் நசிகேதஸுக்குக் கூறும் உறுதி மொழியும் இதுவே.*

*'நான் தீட்சை பெறவில்லையே! மந்திர ஜபம் லட்சகணக்கில் செய்யவில்லையே! நான் எப்படி இறைவனை அடைவது?' என்று அஞ்ச வேண்டாம். இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணம் எழுந்தவுடனே குருவடிவில் இறைவன் வந்து வழி காட்டுவான்.*

*அருணாசல புராணத்திலும், அண்ணாமலை கிரிவலம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழும் போதே, ஓர் அடி எடுத்து வைக்கும் போதே, கிரிவலம் வந்த பலன் சித்திக்கிறது என்று கூறப்பட்டுள்ளதல்லவா?*

*நாம் ஒன்றைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கும் போது, அதனை அடையும் வழியும் நமக்குப் புலனாகிறது பேரின்பத்தை அடைய வழிகாட்டும் கதவு திறக்கிறது. 'இதுவரை இந்த அநுபவத்தை அடையவில்லையே என்ற*

*எனது வேதனை மறைந்து விட்டது. அவனைத் தேடிக் கண்டு கொண்டேன் எங்கே தெரியுமா? என்னுள்ளேயே தேடிக் கண்டு கொண்டேன்!' என்று பரவசத்துடன் பாடுகின்றார் திருநாவுக்கரசர்.*

***'தேடிக் கண்டு கொண்டேன்***
***திருமாலொடு நான்முகனும்***
***தேடித் தேடொணாத்தேவனை என்னுள்ளே***
***தேடிக் கண்டு கொண்டேன்'***

*என்று பாடுகிறார். "மற்றவர்கள் எல்லாம் வெளியில் தேட நானும் அப்படித் தேடினேன். அவனைக் காணவில்லை. பின் என்னுடைய நோக்கத்தை உள் முகமாக்கி என் உள்ளே தேடினேன். அவன் எனக்கு மிகவும் நெருக்கமாக, என்னைக் காட்டிலும் - இனியனாக என்னுள்ளே இருப்பதை என்னுள்ளே கண்டேன்" என்கிறார் அப்பர் சுவாமிகள்.*

***"வெளிவிடயங்களை விட்டு மனம்தன்***
***ஒளிஉரு ஓர்தலே உந்தீபற***
***உண்மை உணர்ச்சியாம் உந்தீபற!"***
***(உபதேச உந்தியார் 16)***

*ஐம்பொறிகளின் வாயிலாக மனம் வெளிவிஷயங்களை அறிகிறது. இறைவனையும் வெளியில் உள்ள ஒன்றாகக் கருதி அவனை வெளியே தேட முயல்கிறது. அப்போது இறைவன் புலப்படுவதில்லை. அவனை இதயம் உணர்வதில்லை. இங்ஙனம் தேடுகின்ற அறிவின் ஒளி எங்கிருந்து வருகின்றது என்று ஆராயும் போது, உள்ளே இருந்தே வருகின்றது என்று அறிகிறோம். ஆத்ம விசாரணை மூலம் உள்முக நாட்டம் பெற்று ஆயும் போது, தனது உண்மை உணர்வாகிய ஞானநிலையைப் பெறுகிறான். இதனையே பகவான் 'உண்மை உணர்ச்சியாம்' என்று குறிப்பிடுகிறார்.*

***"தேனுக்குள் இன்பம் சிவப்போ கருப்போ***
***வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலி***
***தேனுக்குள் இன்பம் செறிந்து இருந்தாற்போல்***
***ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே!"***
*(திருமந்திரம்)*



*ஸத்குருவின் அருளில் முழு நம்பிக்கை வைத்து, நாம் நம் முயற்சியைத் தொடங்கினாலே போதும், அவர் வழங்கும் அருளமுதம் "நான் வேறு நீ வேறு" என்ற வேறுபாட்டு உணர்வையை போக்கிவிடும். இரண்டு என்ற வேறுபாட்டு உணர்ச்சியையே போக்கிவிடும். இருமை என்பதே இல்லாமல் அவனுக்குள்ளே நாம் அடங்கிவிடுவோம்.*

***"இறவியொடு பிறவி அறநீயும் நானும்***
***ஏகபோகமாய் இறுகும் வகை***
***பரமசுகம் அதனை அருள்!"***

*என்று அடியார் வேண்டுவது சித்திக்கிறது. தலைவி தலைவனுடன் ஏக போகமாய் இறுகி, ஒன்றாகி நான் என்பதே இல்லாமல் தானாய் பரிணமிக்கும் நிலையை அடைகிறாள். "சுகக் கடல் பொங்கி, சொல்லுணர்வு அடங்கித் தலைவனும் ஸ்வம்" ஆக, தான் ஆகப் பொருந்தி, ராப்பகல் இல்லா வெறு வெளி வீட்டில் ரமிக்கும் ஆனந்த பரவசத்தில் ஆழ்கிறாள்.*

*மீண்டும் சிந்தனையைத் தொடர்வோம்.*

*பகவான் பணியில் தங்கள்*

**S. *ராம் மோஹன்***

# ஆனந்த தாண்டவம்

## தமிழ் மொழித்தழுவல் - முனைவர்.மா.முருகேசன்

*(முனைவர்.ஆனந்த குமாரசுவாமியின் ஆங்கில மூலம்)*

*சிவபெருமான்தான் அழித்தொழிப்பவன், சுடலையை நாடுபவன், அவ்வாறு எனின், அவன் எதனை அழிக்கின்றான்? ஊழிக் காலத்தில் விண்ணுலகையும் மண்ணுலகையும் அழிப்பவன் அல்லன், தனித்தனி உயிரின் தளையை அழிப்பவன். சுடலை என்பது தான் என்ன? எங்கே இருக்கின்றது? அது இந்த மண்ணாலான சடலங்கள் எரியூட்டப்படும் சுடுகாடல்ல, அந்த இடம், கைவிடப்பட்ட, உதவாக்கரையென விலக்கித் தள்ளப்பட்ட அவனுடைய அன்பர்களின் இதயமாகிய உள்ளமாகும். எந்த நிலையில் 'தான்' என்ற அகங்காரம் அழித்தொழிக்கப்படுகின்றதோ அந்த நிலையே மாயை மற்றும் கன்மம் அழியும் நிலையாக - இடமாகக் குறிக்கப்படுகிறது. அந்த இடமே மயானச் சுடலையாம், அவ்விடமே திருக்கூத்தன் நடனமிடும் சுடுகாடாகும். அதனாலேயே அவனுக்கு 'சுடலையாடி' எனும் பெயர். இந்த உவமையில், ஆதியில் சிவனாகிய நடராசன் ஆடிய அருளானந்த நடனத்திற்கும் பின் வந்த சுடலையில் பூதங்களோடு அவன் ஆடும் சுடலைத் தாண்டவத்திற்கும் உள்ள வரலாற்று உறவினை அறியலாம்.*

*திருநடனம் பற்றிய இக்கருத்து சாக்தர்களிடமும் உள்ளது, குறிப்பாக வங்காளத்தில் சிவனின் தந்தையாயிருந்து அருளும் அம்சத்தை விட, தாயாய் அருளும் தன்மையை*

ஆராதிக்கப்படுகிறது. இங்குக் காளியே திருநடனம் புரிபவள், அவள் திருநடனமிட நமது இதயமாகிய அரங்கம் அக்னியால் புனிதமாக்கப்பட வேண்டும். பற்றற்ற விட்டொழித்தல் தன்மையால் வெற்றிடமாக்கப்பட வேண்டும். காளியின் மீதுள்ள வங்காள துதிப்பாடல் இவ்வேண்டுதலை முழங்குகிறது.

*நீ தகனப் பூமியை நேசிப்பதால்*
*என் உள்ளத்தைச் சுடலையாக்கினேன்*
*காரிருள் வண்ணம் நீயே சுடலை ஆள்பவள் நீயே!*
*நின் திருநடனம் அந்தமிலா ஆனந்தக் கூத்தாகட்டும்*
*நினையன்றி என் இதயத்தில் வேறொன்றுமில்லை*
*தாயே!*
*அல்லும் பகலும் அணையா அக்னிச் சுடலை*

*வெண்சாம்பல் விரவத்தூவி நின் வருகை நோக்கி*
*அணி செய்து காத்திருக்கச் செய்தேன் என்*
*இதயமதை:*
*காலனை வெல்லும் மாகாளியே! நின் பாதமலர்கள்*
*உய்விக்கும் உன்னத நடனமிட எழுந்தருளுவாய்*
*தாயே!*
*அருட்பாதமதைப் பற்றிக் கொள்வேன் விழிகள் மூட.*

தென்னிந்திய இலக்கியங்களில் - தமிழ் நூல்களில் சிவத்தாண்டவத்தின் உட்கிடக்கை விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். எண்ணற்ற உயிர்கட்கெல்லாம் இக பர சுகங்களை நல்கவே நம் நாதன் திரு நடனம் புரிகின்றான். இவ்வுலக இன்பமே இகமாம். அவ்வுலக இன்பமே பரமாகும். அருள் நந்தி சிவாச்சாரியார் யாத்த சிவஞானசித்தியார் சுபக்கம் ஐந்தாம் நூற்பாவில் இக்கருத்தைக் காணலாம்.

*“அலகுஇலா உயிர்ப் புலன்கட்கு அறிவினை ஆக்கி*
*ஐந்து*
*நலம் மிகு தொழில்களோடும் நாடகம் நடிப்பன்*
*நாதன்”*
*“-------------------- உயிர்கட்கு எல்லாம்*
*விரிந்திடும் அறிவும் காட்டி வீட்டையும் அளிப்பன் -*
*மேலோன்”*

மேலும், உண்மை விளக்கம் பாடல்கள் கூறுவனவாவன:

*வாலறிவனாகிய இறைவன் உயிர்களின் ஆன்மாவில் நர்த்தனமிடுவது நமது பாபமாகிய மலம், ஆணவம், அறியாமை ஆகியவைகளைப் போக்குவதற்காகவே. மாயையெனும் இருளைப் போக்கி, கன்மமாகிய கட்டுகளை அழித்து, மலம், ஆணவம், அறியாமையை நசுக்கி, அருளைப் பொழிந்து, ஆன்மாக்களைப் பேரானந்தக் கடலில் மூழ்கடித்து, பிறப்பு, இறப்பெனும் தளைகள் மீண்டும் மீண்டும் வாரா வண்ணம் எம் தந்தை தன் திருக்கூத்தை ஆள்கின்றான் நம் இதயத்தில்.*

***எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே***
***நட்டம் புதல்வா நவிலக்கேள் - சிட்டன்***
***சிவாய நம என்னும் திரு எழுத்து அஞ்சாலே***
***அவாயம் அற நின்றுஆடு வான்***

***மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்***
***சாய அமுக்கிஅருள் தான் எடுத்து - நேயத்தால்***
***ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்***
***தான்எந்தை யார்பாதம் தான்.***

***பரைஇடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்***
***உரைஉணர்வுக்கு எட்டா ஒருவன் - வரைமகள்தான்***
***காணும் படியே கருணை உருக் கொண்டு ஆடல்***
***பேணுமவர்க்கு உண்டோ பிறப்பு.***

*இவ்வுலக இயக்கம் பொன்னம்பலப் பெருமானின் பொழுது போக்கு (லீலை) எனும் கருத்தும் சிவஆகம இலக்கியங்களில் முதன்மையாக உள்ளது. “எங்கெங்கும் தங்கும் திருநட்டம் சிவனருள் தன் திருவிளையாடல்” எனத் திருமூலர் இயம்புகிறார். தானே தானாய் ஆடுகின்ற சிவானந்த நடனம் ஸ்க்கிரியபின் படைத்த “பேரானந்தக் கவிதை” எனும் பாடலில் மிகத் தெளிவாக எடுத்தோதப்படுகிறது. கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகள் மற்றெல்லாத் தத்துவ விளக்கங்களையும் விடத் தெளிவாக விவரிக்கிறது. ஸ்க்கிரியபின் எதை எழுதியுள்ளாரோ அதைப் போலவே நுணுக்கமாகப் பழங்கால இந்தியச் சிற்பிகள் படிமங்களில் வடித்துள்ளனர்.*

***ஆன்மா புருஷ நர்த்தன மிடுகின்றது***
***ஆன்மா விழைய***

*ஆன்மா யோகமாயையயான கற்பனையில்*
*அனைத்தையும்*
*படைத்து*
*காதலால் கசிந்து ருகும் பேரானந்தத்திற்குத் தன்னைத்*
*தானே அர்ப்பணிக்கிறான்,*
*..................................................................*
*தன்படைப்பு மலர்களாகிய பிரகிரிதியின் முத்தத்தில்*
*இன்பம் துய்க்கிறான்*
*அவர்களின் அழகில் மயங்கி, அவன் ஓடியாடிக்*
*குறும்பு செய்து நடனமாடிச்*
*சுற்றிச் சுழல்கிறான்........................................*
*இத்திருக்கூத்தில் (லீலையில்) ரோமாஞ்சமும் அவனே,!*
*பேரானந்தமும் அவனே,!*
*இயல்பான பரிபூரண பேரானந்தக் காதல்*
*போராட்டத்தில்*
*கருத்திலாக் கவின்மிகு கலவியில் இணையும்*
*தன்மையில்*
*பேரானந்த விழிப்பில், மட்டும், கலவியில் மட்டுமே*
*ஆன்மா அவனின் அம்சம் எனும் தன்னியல்பை*
*அறிகிறது*
*ஓ! என் வையகமே! என் வாழ்வே! என் மலரே! என்*
*மகிழ்ச்சியே!*
*நின் ஒவ்வொரு நொடியும் யான் படைக்கிறேன்*
*முன் வாழ்ந்த உருவெலாம் உதறித்தள்ளி*
*நான் என்றும் நிலையுறும், இல்லை, இல்லை,*
*இல்லையாம்*
*இவ்வானந்த நடனத்தில் திளைத்து, அதன் சுழற்சியில்*
*மயங்கி*
*பேரின்ப நிலையின் பேரானந்த வானில் அவன்*
*பறக்கிறான்*
*இடையறா இம்மாற்றத்தில் - சம்சார, நித்ய பாவ-*
*இவ்வின்ப வானில் பற்றற்ற, புனிதமான வட்டமிடுதலில்*
*ஆன்மாதன்னை உணர்ந்த, தன்மயானந்தராய்*
*உணர்கிறான்*
*அவன் சித்தத்தில், கேவலத்தில், முத்தியில்*
*என்றும் படைத்து எங்கும் பிரகாசமாய், விளக்கமாய்*
*பிரபஞ்ச உருவில் அனைத்திலும் லீலை காட்டி*
*அவன் தன்னைத்தானே உணர்கிறான்.........*
*நான் நின்னுள் தாமே இருக்கிறேன்! ஓ, என்*
*அகிலமே...!*
*எனைக் கனவு காணும் போது நான் உருக்கொண்டு*
*வெளிப்படுகின்றேன்...*

***நீயே அனைத்துமாய் பரிபூரண அலையாய் பேரானந்தமாய்***
***மகாபிரளயத்தில் அண்டசராசரங்கள் ஆரத்தழுவிக் கொள்ளப்படுகிறது***
***ஆன்மாதன் உன்னத நிலையில், எல்லையிலா அச்சத்தியின்***
***அலையினைப் பூரணமாய்த் தன்னுள் உணர்கிறான்.***
***அவனே எல்லாம், அனைத்திலும் - இவ்வண்டம் அத்***
***தாண்டவத்தில் "தானே, தானே" என ஆனந்தக்***
***குதூகலத்தில் கூத்தாடுகிறது.***

*படைக்கப்பட்ட உயிர்களின் உள்ளீடாய் விரவி நிற்கின்ற சிவனின் இத்தன்மை, அழியும் உயிர்களின் கண்களுக்கு விருந்தளிக்கவே அவன் நடனமிடுகின்றான் என்ற மறுப்பிற்கு வித்திடுவதாய்த் தென்படுகிறது. இவ் ஐயப்பாட்டினூடே, இப்பிரபஞ்ச இயக்கம் சரிவர நடைபெறவும், அவனை நாடியவர்களுக்குப் பிறப்பு - இறப்பு எனும் தளைகளிலிருந்து விடுதலை தருவதற்குமே அவன் ஆனந்த நடனமிடுகின்றான் எனும் விடையும் வெளிப்படுகிறது. மேலும், நாம் மானிட நடனத்தையும் சரிவரப் புரிந்து கொள்வோமேயானால் அத்திருநடனம் கூட விடுதலைக்கு ஈர்த்துச் செல்வதைக் காணலாம். அவனின் நடனம் அவனின் இயல்பு, அவன் அசைவுகள் அவனின் பிறவிக்குணம் (சுபாவம்), அவன் செயல் தன்னுள் தானே உந்தி எழுவது, குறிக்கோளற்றது, ஏனெனின் அவன் எந்த ஒரு செயல்பாட்டு நிலைக்கும் அப்பாற்பட்டவன். இவ்விடையை எக்காலத்தும் நிலைத்திருக்கும் உண்மைக்கு மிக அருகில் உள்ளது.*

*மேலெழுந்தவாரியாக நோக்கும் போது சிவானந்த நடனம் பஞ்சாக்ஷரத்தோடோ அல்லது "சிவாய நம" - "சிவனே போற்றி" எனும் துதியோடோ ஒன்றாக்கப்படுகிறது. உண்மை விளக்கம் எனும் நீல் கீழ்க்காணுமாறு விளக்குகிறது.*

*திருவெழுத்து ஐந்தையும், அண்ணலாகிய சிவனைக் குறிக்கும் சிகாரத்தை முதலாக வைத்து இடையறாது*

*எண்ணி வந்தால், திருவருளாகியச் சக்தி வெளிப்பட்டு உயிரைக் கேவலமும் சகலமும் நீங்கிய அருள் நிலையில் சிவத்தோடு ஒன்றாக இணைக்கும் எல்லயற்ற சிவானந்தத்தை நுகரச் செய்யும், அந்நிலையில் இருளான ஆணவ மலம் பற்றறக் கழியும்.*

***அண்ணல் மதலா அழகுஆர் எழுத்து ஐந்தும்***
***எண்ணில் இராப்பகல் அறஅறு இன்பத்தே - நண்ணி***
***அருளானது சிவத்தே ஆக்கும் அணுவை***
***இருளானது தீர இன்று.*** *(பா.42)*

*உண்மை விளக்கத்தின் மற்றொரு பாடல் அக்னி ஒளி வட்டமாகிய திருவாசியை விவரிக்கின்றது. ஐந்தெழுத்து மந்திரமும் திருநடனமும் 'ஓம் ' எனும் மந்திரமாகவே கருதப்படுகிறது. 'கொம்பு ' அல்லது 'வளைவு ' சிவ வடிவில் வரி வடிவமாக உணரப்படுகிறது.*

***ஓங்காரமே நல் திருவாசி உற்றுஅதனில்***
***நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்***
***அற்றார் அறிவர் அணிஅம்பலத்தான் ஆடல்இது***
***பெற்றார் பிறப்பு அற்றார்பின்*** *(பா.34)*

*'ஓம்' என்னும் பிரணவமே அவனைச் சூழ்ந்துள்ள திருவாசியாகும். அப்பிரணவத்தில் தோன்றிய அச்சுரங்கள் ஐம்பத்தொன்றும் திருவாசியில் விளங்கும் சுடர்களாகும். முதல் ஒளியாகிய ஓங்காரமாம் திருவாசியுள், அவ்வோங்காரத்தின் உள்ளொளியாய் விளங்கி நிற்பவன் கூத்தப்பெருமான். அவனது கூத்தின் இயல்பை 'யான்', 'எனது' என்னும் செருக்கு அற்றவரே அறிவர். அவ்வாறு அறிந்து வழிபடும் பேறு பெற்றவர் பின் பிறவாத நிலை பெற்றவர் ஆவர்.*

*உமாபதிச் சிவாச்சாரியாரின் திருஅருட்பயன் எனும் நூல் திருவாசியின் இயல்பை விளக்குகின்றது, இயற்கை நடனம், சிவானந்த ஞான நடனம் என வேறுபடுத்திக் காட்டுகின்றது. இயற்கை நடனத்தைக் குறிக்கும் ஊன நடனம் ஒரு பக்கம், மறுபக்கம் ஞான நடனம். இரண்டிற்கும் நடுவே மனத்தைச் செலுத்தி ஆய்ந்து உணர்வாயாக என்று கூறுகிறது.*

*'ஊன நடனம் ஒருபால், ஒருபாலா*
*ஞான நடம், தான் நடுவே நாடு!'*

முதலாவது நடனம் பொருளின் இயல்புத் தன்மை, பொருளின் தொகுப்பு மற்றும் தனி ஒன்றின் சக்தி, இதுவே ஒளிவட்டமாம் திருவாசி, ஓங்காரமாம் காளியின் நடனம். மற்றொன்று சிவனின் திருக்கூத்து - இது ஓங்காரத்தினின்றும் விலகாமல் நிற்பது - அர்த்மாதரா அல்லது பிரணவத்தின் நான்காம் எழுத்து - சதுர்த்தம் மற்றும் துரியம் எனப்படுகிறது. முதலாம் நடனமாகிய ஜடப்பொருள் உயிரும் உணர்வும் பெறுவது சிவனின் விருப்பத்தாலேயே. சிவன் விரும்பி அதை நிகழ்த்தவில்லயெனின் ஜடப்பொருள் நடனமிடா.

திருவாசியாகிய ஒளிவட்டத்தினைப் பற்றிய நுணுக்க விளக்கத்தின் முடிவுயாதெனின் அது பொருளையும் பிரகிருதியின் இயல்பையும் குறிக்கும். இதன் மகத்துவமாவது சிரமும், கைகளும், பதமும் இவ்வொளி வளைவினைத் தொட்டுக் கொண்டு வளைவினுள் சிவன் நடமிடுவது தான், அங்கிங்கெனாதபடி பிரபஞ்சம் எங்கும் விரவி நிற்கும் 'புருஷ' எனும் ஆன்மாவாம். இவ்விரண்டிற்கும் நடுவே, 'சிவ' மற்றும் 'நம' எனும் சொற்களின் ஊடே நிற்கின்ற 'ய' போலத்தனி உயிர் நிற்கின்றது.

இவண் முழு விளக்கத்தையும் தொகுத்துக் காண்போம், சிவானந்தத் தாண்டவத்தின் முக்கியச் சாரம் மூன்றாகும், முதலாவது, இப்பிரபஞ்ச இயக்கத்தின் மூலாதாரமாய் உள்ள பொன்னம்பலக் கூத்தனின் நளின நடனம், அது அந்தத் திருவாசியால் உணர்த்தப்படுகிறது, இரண்டாவதாக, எண்ணிலா உயிர்கள் மாயை வலையில் உழலா வண்ணம் கடவுள் பால் கூட்டுவித்தலே அவனுடைய கூத்தின் நோக்கமாகும். மூன்றாவதாக, திருக்கூத்தின் நடன அரங்கம் அகிலத்தின் மையமான சிதம்பரமாகிய நமது உள்ளம்.

பிரம்மாவின் இரவில் இயற்கை சலனமற்றது. சிவன் விரும்பினாலன்றி இயற்கை நடனமிடா. அவன்தன்

*ஆனந்த மோன நிலையிலிருந்து விழித்தெழுந்து தன் ஆனந்த நடனத்தில் - சலனமற்ற பொருள்களில் உயிர் அலைகளை உந்தி எழச் செய்யும் நாதத்தைத் துள்ள செய்கின்றான். ஓ! பொருள்களெல்லாம் அவனைச் சுற்றியே பெருமையுடன் நர்த்தனமாடுகின்றன. ஆனந்தத் தாண்டவத்தில் அவன் பல நிகழ்வுகளை நடத்துகிறான். காலம் கனியும் போது அவன் தன் நடனத்தால் எல்லா உருவங்களையும் பெயர்களையும் அக்னியால் அழிக்கிறான், புதிய ஓர் அமைதியினை நிலை நிறுத்துகிறான், இது கவிதையாயினும் அறிவியலுக்கு அப்பாற்பட்டதன்று. முழுவதும் உணர்ந்த நம் மோனமுனிபுங்கவர்களால் அமைக்கப்பட்டுக் காலங்காலமாய், தலைமுறை தலைமுறையாய் மக்களின் போற்றுதலுக்குரியதாக நடராசத் திருவுருவம் உள்ளமை ஆச்சரியப்படத் தக்கதன்று. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள், எல்லாக் கருத்துக்களையும் பழங்காலத்திய மூட நம்பிக்கையோடு தொடர்புபடுத்திப் போதுவதில் வல்லவர்கள், அளவில் பெரியதையும், அளவில் சிறியதையும் ஆராய்பவர்கள் நாம். அத்தன்மையாளர்களாகிய நாம் இன்னும் ஆனந்த நடனமிடும் நடராசரைத் தொழுபவர்களே!*

*பேரானந்தக் கூத்தனின் சிவத்தாண்டவ வடிவக் கருத்து.*

*அறிவியல், சமயம், கலை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தொகுப்பே இவ்வுன்னதமான சிவத்தாண்டவ அம்சம் எனக்கருத்தில் கொள்வதுச் சாலச் சிறந்தது. சிந்தனையாளர்களாலும் , உலகெங்கும் உள்ள தத்துவ ஞானிகளாலும் எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும் உள்ள கலையை நேசிக்கின்ற கலைஞர்களாலும் ஒத்துக் கொள்ளக்கூடிய கருத்தினை முதன் முதலாக உருவமாக வடித்த முனிவர்களாகிய சிற்பக் கலைஞர்களின் சிந்தனை ஒட்டமும் அன்பும் வியக்கத்தக்கதாகும். இவ்வடிவம் உண்மையின் வெளிப்பாடு, பின்னலான வாழ்க்கைச் சிக்கலுக்கு ஒரு*



திறவுகோல். இது ஒரு இயற்கைத் தத்துவம். இவ்வடிவில் வாழ்க்கையின் உள்ளுணர்வுகளை எடுத்தியம்பும் வடிவமாக உய்த்துணர்பவர்களுக்கு மகத்தான சக்தியுடயதும், கருணை பொருந்தியதுமாகிய இந்த ஆனந்த நடன வடிவம் உன்னதமாய் இருக்கின்றது.

# செவியமுதம்

**வஸந்தா ராகவன்**

உலகங்கள் நிரம்பிச் செயல்படும் இக்கால உலகில், நமக்கு மனத் தூண்டல்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் வரலாம், எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்பது எவ்வளவு உண்மை. அலுவலகத்தில் ஒரு அன்பரிடம் பேச நேர்ந்தது. மனித எண்ணத்தின் மற்றொரு பரிமாணத்தை அவர் பேச்சில் அறிந்துகொள்ள முடிந்தது. மனிதர்கள் ஒருவருக்கொருவர் பேசும் போது அதில் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு மறைந்திருக்கிறது என்பது அவருடைய வாதம். எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி ஒருவருக்கொருவர் பேசுகிறார்கள் என்றால் அது சாத்தியமேயில்லாத ஒன்று என்று அவர் கூறினார். ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் பேசும் போது அவர்கள் ஒருவருக்கு ஒருவரிடம் எதிர்பார்ப்பு இருந்தால் அது two way எனவும் அதுவே ஒருவரிடம் மட்டும் இருந்தால் one way எனவும் கூறினார். உள்ளார்ந்து பார்க்கையில் அது உண்மையே. நாம் உலக வாழ்க்கையில் வெற்றிகளையும், பொருள், புகழ், உடல் நலத்தை இன்னும் ஏனைய காரியங்களை எதிர்பார்த்துத் தான் இயங்குகிறோம். அதே சமயம் ஓர் ஓர் சமயங்களில் ஆன்மீக முயற்சியையும் மேற்கொள்ள எத்தனிக்கிறோம். அப்படி என்றால் ஸம்ஸார ஸாகரத்தில் இருந்துகொண்டே சாதகமும் புரிய இயலுமா? உலக விஷயங்களில் வெற்றி பெற்றாலும் அல்லது பெறாவிட்டாலும் கூட அவனால் நிம்மதியாக கடவுளை எண்ணிக்கொண்டே சதாசர்வகாலமும் இருக்க முடியுமா?

நாரதர் எண்ணெயை ஏந்திக் கொண்டே பெருமாளை வலம் வந்த கதைதான். சாதகம் செய்ய வனாந்திரத்திற்கோ, தனியான மலைப்பிரதேசத்திற்கோ சென்று விட்டால் அங்கு பகவானை வேண்டி அவனை அடைய வழிதேடுவதே சாதகனின் ஒரே தேடலாக அமைந்துவிடும். அவ்வாறின்றி இந்த உலக வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே சாதகத்திலும் ஈடுபட்டால் அந்த அடியவனுக்கு எத்துணை எத்துணை இடர்ப்பாடுகள். எத்துணை எத்துணை புத்தகங்கள், விளக்கவுரைகள், புதிய புதிய குருமார்கள், அது போக எல்லாவற்றிலும் எத்துணை பற்றீடுபாடுகள் cult. அது one way யோ two way யோ அதைப் போக்க என்ன வழி? ஆதியும் அந்தமும் இல்லா அந்த அருட்பெருஞ்சோதியை சாதகர்களாகிய நாம் கண்டறிய என்னதான் வழி? இதனை நம் அறிவைக் கொண்டும், ஆராய்ச்சியைக் கொண்டும் அறிய இயலுமா?

**ஏதுக்களாலும் மிக்க அறிவாலும் சோதிக்க வேண்டா**
**சுடர்விட்டு உளன் நம் ஜோதி!**

என்று விடைதருகிறது திருஞானசம்பந்தரின் பாடல். நமது அறிவு சார்ந்த ஆராய்ச்சி வெற்றி தருமோ? அல்லது தீவிர நம்பிக்கையுடன் சாதனை செய்தால் இறை உணர்வு கிட்டுமோ?

இரு தவளைகளின் கதைதான் நினைவிற்கு வருகிறது.

ஒரு தயிர் நிறைந்த குடத்தில் இரண்டு தவளைகள் தவறி விழுந்து விடுகின்றன. ஒரு தவளை அறிவு சார்புடையது. நன்றாகக் கற்ற அந்தத் தவளை விஷயங்களைக் கல்வி அறிவால் அலசி ஆராயுமளவிற்கு அறிவு வாய்ந்தது. தர்க்கத்திலும் நிறைந்த வல்லமை வாய்ந்தது. மற்றொரு தவளையோ கல்வி, கேள்விகளில் அத்துணை சமர்த்தல்ல. ஆயினும் அத்தவளை,

**என்பாலே சித்த மிருத்தியெப் போதும் -உள்**
**ளன்பாலே பத்திசெயு மன்பருக் கென்னையவர்**

***சார்வா ரெதனாலச் சற்புத்தி யோகத்தை***
***யீவேனா னென்ருளா லெண்!***

***(பகவத் கீதாசாரம் - 19)***

*எவன் ஒருவன் வெளிவிஷயங்களை விட்டு, என்னிடத்தில் மனதை திடமாக நிறுத்தி சதாசர்வ காலமும் மனப்பூர்வமான பக்தி செய்கிறானோ, அவனை எந்த யோகத்தினாலே என்னை அடையக் கூடுமோ, அந்த மேன்மையான புத்தியை அவர்களுக்குக் கொடுத்திடுவேன் என்ற பகவானின் வாக்கின் மீது பெரும் நம்பிக்கை கொண்டது.*

*குடத்தில் விழுந்த தவளைகள் எப்படி வெளியே வருவது என்று நினைத்துப் பார்க்க அறிவார்ந்த தவளை இத்துணை ஆழத்தில் இத்துணை திரவம் (தயிர்) நிறைந்திருக்கும் குடத்தில் விழுந்தால், தான் எவ்வளவுதான் எம்பி எம்பிக் குதித்தாலும் குடத்தை விட்டு வெளியே வருவது இயலாத காரியம், இது பௌதீக விதிகளுக்கு எதிரானது என்ற சரியான அறிவுபூர்வமான பதிலையும்/ இறைவனின் அருளைப்பற்றிய தப்பான கணக்கையும் போட்டு குடத்தில் மூழ்கி மாய்ந்து போனது. நம்பிக்கை மிக்க தவளையோ வெளியே வருவதொன்றையே குறி வைத்து, தன் சிறு கால்களால் தயிரை உதைத்து (கடைந்து) உதைத்து வெளியே வர முயற்சிக்க, தயிரானது வெண்ணையைத் திரட்டிப் பெருக்கியது. அதனால் ஏற்பட்ட உயரத்தின் மீது ஏறிய தவளை ஒரே எழும்பில் குடத்தை விட்டு வெளியே வந்து உயிர் பிழைத்தது.*

*அதுபோல்தான் நம்மை மிகவும் அறிவாளிகளாக நினைத்துக்கொண்டு பரம்பொருளை அடைய மூச்சை அடக்கி, பேச்சை அடக்கி, தர்க்கங்கள் செய்து வாத ரீதியாக அணுக முயல்கிறோம். அவன் என்ன ஒரு கற்சிலையிலோ அல்லது ஒரு மதக்குறியிலோ அடக்கிவிடக்கூடிய வஸ்துவா என்ன? புருஷஸூக்தத்தில் வருவது போல நாம்*

அவனை எவ்வளவு என்று நினைக்கிறோமோ அதைவிட உயர்ந்தே இருக்கிறான் அந்த அளப்பரியா பரம்பொருள்.

கௌடபாதர் எழுதிய மாண்டூக்ய காரிகா உபநிஷத்தில் வரும் ஒரு பறவையின் முயற்சியும் சற்றுமுன் நாம் கண்ட தவளையின் நிலைக்கொத்ததே. பெண் பறவை ஒன்று கடற்கரையில் தன் இனத்தைப் பெருக்குவதற்கு முட்டைகளை இடுகிறது. ஒரு பேரலையோ அம்முட்டைகளையெல்லாம் எடுத்து கடலகப்படுத்திக் கொண்டுவிடுகிறது. மனம் உடைந்த பெண் பறவை அழுகின்றது. அதைக் கண்ட ஆண்பறவை அம்முட்டைகளை எவ்வாறேனும் காப்பாற்றி குஞ்சு களைப் பொரிக்க நினைக்கும் பெண் பறவையை மகிழ்விக்க என்ன செய்யலாம் என்று யோசித்தது. பின் அங்கு கிடக்கும் சிப்பிகளை மூக்கால் பிடித்துக் கொண்டு கடல் தண்ணீரை எடுத்து எடுத்துக் கரையில் ஊற்றத் துவங்குகிறது. சிறிது நேரம் செல்லச் செல்லப் பிற பறவைகள் அக்காட்சியை கண்டு ஏன் இப்படி வீணாக ப்ரயத்தனம் செய்து கொண்டிருகிறாய், கடல் நீர் முழுவதையும் உன்னால் இரைத்து முட்டைகளை மீட்க முடியுமா? என்று கேட்கின்றன. அப்படியும் ஆண்பறவை தன் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து தண்ணீரை ஊற்றிக் கொண்டிருந்தது. ஆண்பறவைக்கு உதவ நினைத்த மற்ற பறவைகளும் தங்கள் சிறிய மூக்கினால் தண்ணீரை மொண்டு ஊற்றுகின்றன. பறவைகளின் அரசனான கருடன் இவைகளின் செயலினால் மிகவும் வருத்தம் அடைந்தது. கருடன் என்ன சொல்லியும் பறவைகள் தங்கள் முயற்சியை விட்டபாடில்லை. இதனால் கருடன் விசனத்துடன் மஹாவிஷ்ணுவிடம் போய் தன் வேண்டுதலை வைக்க, மஹாவிஷ்ணுவும் வருணனிடம் தன் வாகனனான கருடன் மனக்கவலையுடன் இருப்பதைக் கூறி முட்டைகளைத் தாய்ப் பறவையிடம் திருப்பித் தரக்

கட்டளையிடுகிறார். மஹா விஷ்ணுவின் கட்டளையை சிரமேற்கொண்ட வருணன் சமுத்திரராஜனுக்கு ஆணையிட முட்டைகள் பத்திரமாகக் கரை ஒதுங்கத் தாய்ப் பறவையும் மகிழ்ச்சியுடன் அடைகாக்கிறது.

ஞானம் என்ற முட்டைகள் அஞ்ஞானக் கடலுக்குள் ஒளிந்திருக்கின்றன. நம் முயற்சியினாலும் ஸ்திரமான நம்பிக்கையினாலும், ஞானத்தைப் பெற முயலும் போது கருடனான குரு நம் வழி வந்து நம் முயற்சிக்கு உதவி, நம்மைக் கரை சேர்க்கிறார் என்பதே இக்கதையின் தாத்பர்யம்.

மற்றொரு துளி தேனைச் சுவைக்க, ஒரு புத்தகத்தைத் திருப்பும்போது கண்ணில் பட்ட வார்த்தை மனசாந்தி. எவ்வளவு முரணுரை (paradoxical). மனதைப் பற்றி ஓஷோ கூறியதை நினைவுக்கூர்வோமா?

இந்த உடல் காரிருள் என்றால், ஆன்மாவோ தேஜோமயமானது. இருளும், ஒளியும் சேரும் அவ்விடமே மனதின் ராஜ்ஜியம். ஆகையினால் மனமானது சிறிது வெளிச்சத்திலும் சிறிது இருட்டிலும் உலா வருகிறது. இவ்வாறு இரு வேறு திசைகளில் பயணிப்பது அதற்கு ஒரு இறுக்கத்தை ஏற்படுத்துகிறது. மனதை உடலானது தன் பக்கம் இழுக்க, ஆன்மாவும் தன் பக்கம் இழுக்கிறது. உடலும், ஆன்மாவும் இணையான சக்தி பொருந்திய காந்தங்களாகும். ஆகையினால் மனமானது இரு வேறு திசைகளில் ஒரே சக்தியுடன் இழுக்கப்படுகிறது. அதனால் மனம், சில சமயம் ஆன்மாவையும், சில சமயம் உடலையும் சார்கிறது. அது எதைத் தேர்ந்தெடுத்தாலும் மனதிடம் தான் தவறு செய்வதாகவே ஒரு உணர்வு மேலோங்குகிறது. இது ஏனெனில் உடலைத் தேர்ந்தெடுத்தால் ஆன்மாவையும், ஆன்மாவைத் தேர்ந்தெடுத்தால் உடலையும் புறக்கணிப்பது போன்ற உணர்வு மனதில் தூண்டப்படுகிறது. அதனால் மனம் வாய்ப்புகளை நம்பியே வாழ்கிறது. ஆயினும் அது

*எந்த வாய்ப்பென்றாலும் (உடலோ, மனமோ) அதில் அதற்கு முழு நிறைவு ஏற்படுவதில்லை. அதனால் நிறைவு கொள்ள அது மேற்கொள்ளும் முயற்சிகள் தோல்வியைத் தழுவ அதில் நிறைவது வெறும் கவலையும், ஏக்கமும்தான். மனதினால் உடலின் பாகமாகவோ, அல்லது மனதின் பாகமாகவோ மாற இயலாது. ஆகையால் ஒருவன் இறுக்கத்தினின்று வெளிவர வேண்டுமாயின், மனதினைக் கடந்து செல்ல வேண்டும் மனதை கடந்து சென்றாலொழிய அவனால் அமைதியுடன் இருக்க இயலாது. மனஅமைதி என்ற சொற்றொடர் உண்டு. ஆனால் அந்தச் சொல்லே ஒரு முரண்பாடான வழக்கு. ஏனெனில் மனம் என்றாலே அங்கு அமைதி என்ற வாதத்திற்கே இடமில்லை. அப்படி இருக்க மனஅமைதி என்பது சிறிது வேடிக்கையாக உள்ளது அல்லவா? சரியாக அந்த வார்த்தையை அமைத்திருக்க வேண்டுமெனில் அது மனமில்லா அமைதி என்றே அமைந்திருக்க வேண்டும். அப்போது தான் நாம் நம் உண்மையான ஸ்வரூபத்தில் நிலை பெற இயலும். இந்நிலையையே பகவான் மனோ நாசம் எனக் குறிப்பிடுகிறார்.*

***ஒலிவடிவிற்கு மயங்கி இயங்கும்***
***மனத்தை தூக்கி எறிந்து***
***கவித்துவமான உண்மைகளை நினைத்திடும்***
***உள்ளத்தினை வளர்த்து விடு***
***தர்க்க திறமையை தகர்த்தெறிந்து***
***உள்உணர்வுக்கு இடம் கொடு***
***அற்பமான ஆசைகளை அழித்துவிட்டு***
***அற்புதகானங்களில் நடனமிடு***
***அறிவுத்திறமையினை ஒதுக்கிவிட்டு***
***அகத்திறனிடத்தில் நகர்ந்து செல்***
***வாழ்க்கையை செலுத்த தேவை***
***இதயமே அல்லால் மதியல்ல***
***மறைப்பொருளுக்கு அருகே உள்ளது உன்***
***உணர்வே அன்றி அறிவு அல்ல!***

...வளரும்..

# நாம் எதையும் முழுமையாகப் பார்ப்பதில்லை

*(வஸந்த இதழ், ஜூன் 2010 -* Krishmamurti Foundation India, *திரு. ஜே.கிருஷ்ணமூர்த்தி - நண்பருக்கும் நடந்த உரையாடலின் ஒரு பகுதி)*

*நண்பர்: பார்த்தறிதல் என்ற பொருளில் கவனித்தல், காணுதல், புரிந்துகொள்ளுதல், விழிப்போடிருத்தல் போன்ற சொற்களையும் உபயோகிக்கிறீர்கள். முழுதாகவும் தெளிவாகவும் பகுக்கப் படாமலும் பார்க்கும் பார்த்தலைக் குறிப்பதாகவே அவற்றை நீங்கள் சொல்வதாகத் தோன்றுகிறது. நம்மால் எதையாவது முழுமையாகப் பார்க்க முடியுமா? எப்பொழுதுமே ஏதாவது இரகசியமாக மறைத்து வைக்கப்பட்ட நிலையில் தான் ஒவ்வொன்றும் இருக்கிறது, சரிதானே? இந்நிலையில் நீங்கள் அரைகுறையாகத் தான் பார்க்கிறீர்கள், அல்லவா? இரகசியங்கள் ஒளிந்திருப்பதால் முழுமையாகப் பார்த்தறிய முடியாத நிலையிலிருப்பதைப் பற்றி நீங்கள் விரிவாக விளக்கினால், எனக்கு உதவியாய் இருக்கும் என்னைப் பற்றி முழுவதுமாக அறிந்து கொள்ள என்னால் முடிந்தால், என் பிரச்சினைகள் அனைத்தும் ஒரு வேளை முடிவுறலாம். ஆக, பார்த்தறிதல்/காணுதல் என்று எதைச் சொல்கிறீர்கள்? தன்னை ஒருவரால் முழுவதுமாக பார்க்க முடியுமா?*

*கிருஷ்ணமூர்த்தி: அரைகுறையாகத் தான் நாம் எப்பொழுதுமே விஷயங்களைப் பார்க்கிறோம். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன - ஒன்று, நமக்கு*

*கவனமின்மை, இரண்டாவது காரணம், என்னவென்றால் பார்க்கும் விஷயத்தை, பாரபட்சத்துடனும் அவ்விஷயத்தைப் பற்றிய மனோரீதியான கணிப்புகளின் வழியாகவும் பார்க்கிறோம். எனவே, நாம் எதையும் எப்போதும் முழுமையாகப் பார்ப்பதில்லை. நம் எண்ணங்களுடன் தொடர்பு கொள்ளாமல், இயற்கையைப் பார்ப்பது கூட மிகவும் கடினமானதே. ஒரு மலரை, அதனைப் பற்றிய கணிப்பு எதையும் கொண்டிராமல், தாவரவியல் விளக்கம் எதையும் கூறாமல் - மலரை மலராகப் பார்ப்பது என்பது மிகவும் கடினமானதாய் இருக்கிறது. கடந்த காலம், சேகரிக்கப் பட்ட அனுபவங்கள் மற்றும் விஷய ஞானம் ஆகியவற்றால் நம்மைப் பற்றி நாம் கொண்டுள்ள கணிப்பை ஒதுக்கி விட்டு, நம்மை நாம் பார்ப்பது என்பது மிகவும் அபூர்வமாக நிகழ்கிறது. நம்மைப் பற்றிய கணிப்பு, கருத்துரு, நமக்கு இருக்கிறு. நாம் இத்தகையவர் இப்படிப் பட்டவர் அல்ல என்ற முறையில் நம்மைப் பற்றி எண்ணி கொள்கிறோம் - நம்மைப் பற்றி ஒரு கருத்தை நிறுவிக் கொள்கிறோம்- அக்கருத்தின் வழியாக, நம்மைப் பார்க்கிறோம், கண்களாலும், புலன்களாலும் மட்டுமல்லாமல், நம் மனதினாலும் பார்க்கிறோம். நம் மனமோ மிகவும் தளைப்பட்டிருக்கிறது. ஆக, அறிவுப்பூர்வமாகப் பார்ப்பது பெரும்பாலருக்கு திருப்தியளிப்பதாக உள்ளது. அவ்வாறு பார்த்து, நாம் அறிந்துக் கொண்டுவிட்டதாக எண்ணுகிறோம், உலகம் முழுவதும் இப்படிப்பட்ட பகுக்கப்பட்ட புரிதல்தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. முரண்பட்ட கருத்துகளும் தீர்ப்புகளும் கொண்ட போர்க்களமாகவும் நாம் இருக்கிறோம்.*

*நண்பர்: ஆனால், நான் எப்படி முழுமையாகப் பார்ப்பது?*

*கிருஷ்ணமூர்த்தி:* ஒரு பிரச்சினையை முழுவதுமாகப் புரிந்து கொண்டீர்களேயானால், பிறகு, அனைத்துப் பிரச்சினைகளையும் உங்களால் புரிந்து கொள்ள முடியும், காரணம், மனிதனின் பிரச்சினைகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்பு உடையன. பிரச்சினையை அது நிகழ்ந்து கொண்டிருக்கும்போது பார்க்க வேண்டும். நிகழ்விற்கு முன்போ அல்லது பின்போ, அதன் நினைவாகவோ அல்லது அதை உதாரணமாக எடுத்துக் கொண்டோ பார்ப்பதில் பலனில்லை. பார்த்தறிதல் என்பது உடனடியாக நிகழ்வது, நீங்கள் ஒன்றைப் பார்த்து அதைப்பற்றி உடனே அறிந்து கொள்கிறீர்கள். அப்படி நிகழாவிட்டால் நீங்கள் அதைப்பற்றி அறிந்து கொள்ளப் போவதே இல்லை, பார்த்தல், கேட்டல், புரிந்து கொள்ளுதல் ஆகியவை உடனடியாக நிகழ்பவை. கவனமாய் கேட்பதும் பார்ப்பதும் கால அளவைக் கொண்டுள்ளவை.

*நண்பர்:* என் பிரச்சினை தொடருகிறது. பொறாமைக்கோ அல்லது வேறெந்தப் பிரச்சினைக்கோ பழக்கங்களுக்கோ அவை தொடருவதற்கு அவகாசம் தருவது எது?

*கிருஷ்ணமூர்த்தி:* இயல்பாக எழுந்த விழிப்புணர்வு, நுண்ணறிவு ஆகிவற்றோடு நீங்கள் அவற்றைப் பார்க்காததால் அல்லவா அவை தொடருகின்றன? அவைகளிலிருந்து விடுபட்டுவிட வேண்டும் என்ற தேவையும் கால அவகாசத்தை அனுமதிக்கிறது. ஒன்றைச் சமாளிக்க ஆற்றல் இல்லாதபோது, அந்த ஒன்று பிரச்சினையாகித் தொடருகிறது, ஆற்றலின்மை, பிரச்சினைக்கு உயிரூட்டுகிறது.

*நண்பர்:* திரும்பப் பிரச்சினை வராமல் இருக்கும் விதத்தில், பிரச்சினையை எப்படிப் புரிந்து கொள்வது?

*கிருஷ்ணமூர்த்தி: பிரச்சினை, அது திரும்ப வராமல் இருப்பதிலா அல்லது அதை புரிந்து கொள்வதிலா - எதற்கு அழுத்தம் கொடுத்து முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? பிரச்சனை திரும்ப வரக்கூடாது என்பதற்கு முக்கியத்துவம் அளித்தீர்களேயானால், பிரச்சினையிலிருந்து நிரந்தரமாகத் தப்பித்துக் கொண்டு விட வேண்டும் என்று நீங்கள் விரும்புவதாகப் பொருள்படுகிறது. இப்படி விரும்புவது மேலும் ஒரு பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது. ஆகவே, நம்மால் கேட்கப்பட வேண்டிய கேள்வி ஒன்றே ஒன்றுதான் - பிரச்சினையிலிருந்து விடுபடச் செய்யும் விதத்தில், அப்பிரச்சினையை முழுமையாகப் பார்ப்பது எப்படி என்பதே. அமைதியிலிருந்து மட்டும் தான் பார்த்தறிதல் கைகூடும், தொணதொணக்கும் இரைச்சல் மிக்க மனதினால் பார்த்தறிய முடியாது. பிரச்சினையிலிருந்து விடுபடவேண்டும் என்ற விருப்பமாகவோ, அதை அடக்குவதாகவோ மனதில் இரைச்சல் இருக்கக்கூடும். ஆனால் அமைதியான மனம் மட்டும்தான், பிரச்சி னையைப் பார்க்கிறது.*

*நண்பர்; அமைதியான மனதை நான் கொண்டிருப்பது எப்படி?*

*கிருஷ்ணமூர்த்தி: அமைதியான மனதை எவ்வாறு பெறுவது என்ற கேள்விக்கே இடமில்லை. மனம் அமைதியாக இருக்கவேண்டும் என்பதிலிருக்கும் உண்மையைப் பார்ப்பது, மனதை தொணதொணப்பி லிருந்து விடுவிக்கும், அப்படி விடுபட்ட நிலையில் மெய்யுணர்வாக இருக்கும் பார்த்தறிதல் செயல்படுகிறதே தவிர, நாம் அமைதியாய் இருக்க வேண்டும் என்ற கருத்து செயல்படவில்லை. நம் கருத்தின் செயலாக்கமானது முழுமையற்றதாகவும், சிதைந்தும் இருக்கும். முழுமை யற்றதற்கும், முழுமையானதற்கும் இடையே தொடர்பு*

எதுவும் இல்லை. முழுமையற்றது முழுமையானதாகப் பரிணமிக்க முடியாது. ஆகவே பார்த்தறிதல் என்பது மிக முக்கியமானது. பார்த்தறிதல் என்பது கவனம், கவனமின்மையே பிரச்சினையைத் தோற்றுவிக்கிறது.

நண்பர்: எந்நேரமும் கவனத்துடனிருக்க என்னால் எப்படி முடியும்? அது முடியாத காரியம்!

கிருஷ்ணமூர்த்தி: சரியாகச் சொன்னீர்கள், அது முடியாத காரியம்தான். ஆனால், உங்கள் கவனமின்மையைப் பற்றிய விழிப்புணர்வு உங்களிடம் இருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். சதா கவனத்துடன் எப்படி இருப்பது என்பது முக்கியமல்ல - அது பேராசை கேட்கும் கேள்வியாக உள்ளது. கவனமாய் இருப்பதற்காகச் செய்யப்படும் பயிற்சிகளில் ஒருவர் தன்னை இழந்து விடுகிறார். அழகாக இருப்பதற்கும் அன்பு செய்வதற்கும் நீங்கள் பயிற்சிகள் மேற்கொள்ள முடியாது. வெறுப்பு இல்லாதொழியும் போது, மற்றது இருக்கிறது. உங்கள் முழுமையான கவனத்தை வெறுப்பின் மீது செலுத்தினால் மட்டுமே, வெறுப்பு மறைகிறது. வெறுப்பைப் பற்றிய விஷய ஞானத்தைச் சேகரிக்காமல், வெறுப்பைப் புரிந்து கொள்ள வேண்டும், எளிமையாகத் தொடங்குங்கள்.

நண்பர்: நாங்கள் செய்வதற்கென்று பயிற்சி ஏதும் உங்கள் உரையிலிருந்து கிட்டவில்லை என்றால், நீங்கள் பேசுவதில் அர்த்தம் என்ன?

கிருஷ்ணமூர்த்தி: கேட்பது தான் மிகவும் இன்றிமையாதது. கேட்ட பிறகு, எதைப் பயிற்சி செய்கிறீர்கள்என்பது முக்கியமல்ல, உடனடி செயல்பாடாக அமைவது கேட்டல், பிரச்சினைகளுக்கு கால அவகாசத்தைத் தருவது பயிற்சிகள். பயிற்சி மேற்கொள்ளாதீர்கள், தவறுகளை மட்டுமே உங்களால் பயிற்சி செய்ய முடியும் எப்பொழுதுமே புத்தம் புதிதாக மலர்வது கற்றல்.

# ரிபு கீதை

## தியாகராஜன்

*ரிபு கீதை 9/6*

***பூத முதற் பலவிதமாங் கால பேதம்***
***பொய்யான வெகுவிதமாஞ் தேசபேத***
***மோதியிடும் பலவான வந்து பேத***
***மொன்றுமிலா திருப்பவனே விதேக முத்த***
***னீததுநீ யிவனவனா னிவனே யாதி***
***யெவ்விதமாம் பேதமுமோ ரணுவு மின்றிப்***
***போதகனப் பரப்பிரம்ம வடிவேயாகப்***
***பொருந்தியிருந் திடுவோனே விதேக முத்தன்***

*(ஸ்ரீ ரமண மஹரிஷி பொன்மொழிகள் - பக் -.193)*

*கேள்வி - தியானத்திற்கு மிகச் சிறந்த நேரம் எது?*

*ஸ்ரீ பகவான் - நேரம் காலம் எனப்படுவது என்ன?*

*கேள்வி-தாங்கள்தான்அதைச்சொல்லிஅருளவேண்டும்!*

*ஸ்ரீ பகவான் - காலம் என்பது (மனக்) கற்பனையே. உள்ள பொருள் ஒன்றே உளது. அதனை எது எதுவாகப் பாவிக்கிறோமோ அது அதுவாய் அது தோன்றுகிறது. அதைக் காலம் என்றால் அது காலமாய் இருக்கிறது, இருப்பது என்றால் இருப்பதாய் திகழ்கிறது. அதைக் காலமென கண்டபின் அக்காலத்தை இரவு, பகல், நாள், மாதம், வருடம், மணி, நிமிடம், கணம் என்றெல்லாம் பலவாறு பாகுபடுத்துகிறோம். தியானத்திற்கு ஏற்ற காலம் என்பது முதலான சில நியமங்களும் விதிகளும் ஆரம்ப நிலையிலுள்ள சாதகர்களுக்கு நன்மை பயப்பன,*

*எனினும், ஞான மார்க்கத்திற்குக் கால நிர்ணயம் வேண்டுவதில்லை.*

*(உள்ளது நாற்பது - பாடல் 15 யார் லக்ஷ்மணசர்மா - பக்- 67)*

*நிகழ்காலத்தை பொறுத்தே, சென்றகாலம் வருங்காலம் என்ற இரண்டும் தோன்றும், இரண்டும் நிகழ்கின்றபோது அவையும் நிகழ்காலமாகவே தோன்றும், நிகழ்காலம் என்ற ஒன்றே இம்மூன்றுமாம். ஆகையால் இப்போதே தன் உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் சென்ற கால, வருங்கால ஆராய்ச்சிகள் செய்வது, ஒன்று என்னும் முதல் எண்ணை விட்டுவிட்டு எண்ண முயல்வது போல்தான் ஆகும்.*

*(பக்-.68) நான் முன் ஜென்மத்தில் எப்படி இருந்தேன் என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது?*

*ஸ்ரீ பகவான் - முன் ஜென்மங்களைப் பற்றி விசாரிக்கும் முன் இப்போது உமக்கு ஜென்மம் உண்மையா? இப்போது உமக்கு ஜென்மம் எது என்று பார்க்கலாமே! என்றார்.*

*அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - பக் 110)*

*ஸ்ரீ பகவான் - நம் எல்லோரிடமும் உள்ள இறை என்னவென்றால், கடந்த காலத்தில் நாம் எவ்வாறு இருந்தோம், எதிர் காலத்தில் எப்படி இருப்போம் என்று தெரிந்து கொள்ள முற்படுகிறோம். ஆனால் கடந்த காலத்தைப் பற்றியோ, வரப்போவதைப் பற்றியோ நமக்கு எதுவும் தெரியாது. நிகழ்வது தெரியும். நேற்றும், நாளையும் இன்றைய தினத்தைப் பொறுத்தே உள்ளன. நேற்றை, அப்போது இன்று என்றே அழைத்தோம். நாளையும் இன்று என்றே நாளைக்குச் செல்வோம். அதற்கு இறந்த காலமும், எதிர்காலமும் இல்லை. நிகழ்காலத்தின் உண்மை இயற்கையை - நிரந்தர, சாச்வத,*

இருப்பு நிலையைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்வதற்கென்ன?

*(அனுதின - பக் 199)*

கேள்வி - என்னுடைய சில கனவு அனுபவங்கள் மனதில் ஆழமாகப் பதிகின்றன, வேறு சில நினைவிலேயே நிற்கவில்லையே?

ஸ்ரீ பகவான் - நாம் காண்பவை அனைத்தும் (அதை நாம் கனவு நிலையில் அல்லது விழிப்பு நிலையில் கண்டாலும் சரி) ஒரு கனவே. அந்த அனுபவம் முதலியவற்றின் காலவரை பற்றிய ஏதோ தன்னிச்சையான செய்கையினால், ஒரு அனுபவத்தை கனவு நிலையென்றும், மற்றதை விழிப்பு நிலை என்றும் சொல்கிறோம். உண்மை நிலையைப் பொறுத்தவரை இரண்டு அனுபவங்களுமே உண்மையல்ல.

*(ஸ்ரீ ரமண மஹரிஷி பொன்மொழிகள் - பக் -.280)*

கேள்வி - ஞானி, அஞ்ஞானி இருவருக்கும் உலகம் ஒன்றாகத் தோன்றும் போது அவர்கள் பார்வையில் என்ன வித்தியாசம் இருக்கக் கூடும்?

ஸ்ரீ பகவான் - உலகத்தைப் பார்த்தாலும், ஞானி அவ்வுலகுக்கு ஆதாரமாகிய தன்னையே காண்கிறான், உலகத்தைக் கண்டாலும், காணாவிட்டாலும் அஞ்ஞானி தான் இருக்கும் தன் இயல்பாம் தன்னை அறிவதில்லை. படக் காட்சிகளில் திரையில் காணும் சலனச் சித்திரங்களை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள். ஆட்டம் தொடங்கு முன்பு உன் முன் உள்ளது என்ன? வெறும் திரை மட்டும் தானே? அந்தத் திரையின் மேல் காட்சி முழுவதையும் காண்கின்றாய். பார்ப்பதற்குச் சித்திரங்கள் அனைத்தும் உண்மை போல் இருக்கின்றன. ஆனால், அங்குப் போய்த் தொட்டுப் பார்த்தால் நீ பற்றிக் கொள்வது எதை? இந்த

*சலன படங்களெல்லாம் அத்துணை மெய்மையாகக் காணப்படுவதற்கு ஆதாரமான வெள்ளைத் திரையைத்தானே தொட்டாய்? ஆட்டம் முடிந்தபின், சித்திரங்கள் எல்லாம் மறைய, எஞ்சி நிற்பது எது? திரையே. ஆன்மாவும் இப்படியே. உள்ளது உள்ளபடி இருப்பது ஆன்மா ஒன்றே. சித்திரங்கள் தோன்றி மறைகின்றன. நீ ஆன்மா ஒன்றையே பற்றிக் கொண்டால், சித்திரங்களின் தோற்றத்தால் ஏமாற மாட்டாய். திரையை விட்டு சித்திரங்கள் இருப்பதாக ஒருவன் ப்ரமிப்பது போல், ஆன்மாவிற்கு அயலாக உலகமே மெய் என அஞ்ஞானி பிரமிக்கிறான். திரை இல்லாது படங்களுக்குத் தனி இருப்பு அல்லாதது போல, காண்பவன் இல்லாமல் காட்சியும் இல்லை என அறிந்தால் மன மயக்கத்திற்கு இடமில்லை. திரையும், சித்திரமும், பார்வையும் ஆன்மாவே என ஞானி அறிவான் (ஸ்ரீ பகவானின் உள்ளது நாற்பது பாடல் ஒன்றின் கருத்தைப் பார்க்க). சித்திரங்களோடு சம்மந்தப் படாமல் ஆன்மா அவ்வியக்தமாகவும் (காணப்படாமலும்), சித்திரங்களின் சேர்க்கையால் வியக்த்தமாகவும் இருக்கிறது. ஆன்மாவின் வியக்தா வியக்த ஸ்திதிகளில் காணப் பெறும் நிலையிலோ, காணப் பெறாத நிலையிலோ) ஞானி யாதொரு பேதமும் காண்பதில்லை.*

*கேள்வி - ஜீவன் முக்திக்கும் விதேக முக்திக்கும் என்ன வித்தியாசம்?*

*ஸ்ரீ பகவான் - வித்யாசம் ஏதும் கிடையாது. இது குறித்துக் கேட்போர்க்கு விடை இதுவே, உயிருடன் உலவும் ஆன்ம ஞானியே ஜீவன் முக்தர் எனப்படுகிறார். உடல் வீழ்ந்து அவர் மறையும் போது விதேக முக்தி அடைந்து விட்டதாகக் கருதப் படுகிறார். ஆனால் வெளியிலிருந்து காண்போர்களுக்கே இந்த வித்யாசம்*



*எழுகிறது. ஞானிக்கு அல்ல. மரித்த பின்னரும், மரிப்பதற்கு முன்னரும் அவரது ஆன்ம நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லை. ஞானியை மனிதவடிவில் நினைவு கொள்கிறோம் அல்லது அந்த வடிவில் இருப்பதாகக் கருதுகிறோம். ஆனால் அவரோ எப்போதும் ஆன்ம மயமே, ஒரு சமயம் உள்ளும் புறமுமாக இருந்து வரும் ஒன்றேயான மெய்ம்மையே அது தோற்றத்துடனோ வடிவத்துடனோ பிணைபட்டதல்ல என்பதை ஞானி உணர்கிறார்.*

*(திருவருண்மொழி பக் -159)*

*கேள்வி - தன்னை உணர்ந்தவன் முன்னிலும் திறமையுடன் உலகிற்கு உதவுவான் அல்லவா?*

*ஸ்ரீ பகவான் - ஆம், ஆம், தனக்கு அயலாய் உலகம் ஒன்று இருந்தால் நன்றாக உதவுவான்!*

# சிவானந்த லஹரி

**அ.வெ. சுகவனேஸ்வரன்**

***(51)***

***ப்$^{4}$ருங்கீ$^{3}$ச்சா$^{2}$நடனோத்கட: கரமதி$^{3}$க்ராஹீ ஸ்புரன்மாதவா-
ஹ்லாதோ நாதயுதோ மஹாஸிதவபு: பஞ்சேஷுணா சாத்$^{3}$ருத:।
ஸத்பக்ஷஸ் ஸுமனோவனேஷு ஸ புன: ஸாக்ஷான்மதீ$^{3}$யே மனோ
ராஜீ$^{3}$வே ப்$^{4}$ரமராதி$^{4}$போ விஹரதாம் ஶ்ரீசைலவாஸீ விபு$^{4}$:।।***

ப்ருங்கி எனும் ரிஷியினது விருப்பத்தை நிறைவேற்ற நடனத்தை மேற்கொண்டவரும், கஜாஸுரனது மதத்தை ஒடுக்கியவரும், மோஹினி உருவெடுத்த விஷ்ணுவின் வடிவத்தில் மகிழ்ச்சியடைந்தவரும், ப்ரணவ ரூபியும், மிகவும் வெளுத்து விளங்கும் சரீரமுடையவரும், மன்மதனது பாணங்களுக்கு இலக்கானவரும், விண்ணோர்களைக் காக்க ஆவலுள்ளவரும், எங்கும் நிறைந்தவரும், ஶ்ரீசைலத்தில் ப்ரமராம்பிகையைத் துணைவியாகக் கொண்டு கோயில் கொண்டிருப்பவருமான மல்லிகார்ஜுனர் பிரத்யக்ஷமாக எனது மனதாகிய தாமரையில் விளையாடட்டும்.

சிலேடையாக இன்னொரு பொருள்:

பெண் வண்டின் இச்சைக்கேற்பச் சுற்றுவதில் விருப்பமுள்ளதும், யானையின் மதநீரைப் பருகுவதும், பிரகாசிக்கும் வஸந்த ரிதுவில் மகிழ்வதும், ரீங்காரத்துடன் கூடியதும், மிகக் கரிய உடலுடையதும், மன்மதனால் (அவனது கரும்ப வில்லுக்கு நாணாக) ஆதரிக்கப்பட்டதும், பூந்தோட்டங்களில் மிக்க ஆசைகொண்டதும், அழகு நிறைந்த மலையில் வசிப்பதும், எங்கும் செல்கிறதுமாகிய

*இந்த அரச வண்டு மீள மீள நேராக என் மனத்தாமரையில் விளையாடுமாக!*

**(52)**

***காருண்யாம்ருதவர்ஷிணம் க4ன விபத்3 க்3ரீஷ்மச்சிதா3கர்மட2ம்***
***வித்3யாஸஸ்ய ப2லோத3யாய ஸுமனஸ்ஸம்ஸேவ்ய மிச்சா2 க்ருதிம்।***
***ந்ருத்யத்3ப4க்த மயூர மத்ரி3நிலயம் சஞ்சஜ்3ஜ3டா மண்ட3லம்***
***சம்போ4 வாஞ்ச2தி நீலகந்த4ர ஸதா த்வாம் மே மனச்சாதக:।।***

*நீலகண்டரே! நீங்கள் கருணையென்ற அமுதத்தைப் பொழிபவர், தாபங்களாகிய கோடையில் பக்தர்களைக் குளிரவைப்பவர், வித்தையென்னும் பயிர்களின் விளைச்சலையளிக்கும் பொருட்டுத் தூய்மையுள்ளத்தவர்களால் போற்றப்படுபவர்,*

*விரும்பிய உருவமெடுப்பவர், ஆனந்த நடனம் புரியும் பக்தர்களாகிய மயில்களை உடையவர், மலையில் வசிப்பவர், அசைந்தாடும் சடைகளாகிற மின்னலை உடையவர், உங்களை எனது மனதாகிய சாதகப்பறவை இடைவிடாது காண ஆவலுடன் விரும்பி நிற்கிறது. (இங்கேசிவபெருமான்மேகத்தோடுஉவமிக்கப்படுகிறார்).*

**(53)**

***ஆகாசேன சிகீ2 ஸமஸ்த ப2ணினாம் நேத்ரா கலாபீ நதா***
***(அ)னுக்3ராஹி ப்ரணவோபதே3 ஷநினதை கேகீதி யோகீ3யதே।***
***ஷ்யாமாம் சைலஸமுத்3ப4வாம் க4னருசிம் த்ருஷ்ட்வா நடந்தம் முதா3***
***வேதாந்தோபவனே விஹார ரஸிகம் தம் நீலகண்ட2ம் ப4ஜே3।।***

*கருத்த கழுத்தையுடைய மயில் போன்ற நீலகண்டனை சரணமடைகிறேன். (நீலகண்டம் என்பது மயிலுக்கும் பெயராகும், ஆலகால நெஞ்சரான சிவனுக்கும் பெயராகும்). இம்மயிலுக்கு ஆகாயமே கொண்டை, பாம்புத்தலைவனான ஆதிசேஷன் கண்ணுள்ள தோகை, தன்னை அடைக்கலம் புகுந்தவர்களுக்குச் செய்யும் ப்ரணவ உபேதசமே கேகா என்னும் மயிலின் குரல் ஒலி.*

மலைமகள் என்னும் மேகத்தைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு நடனம் புரிந்து, வேதாந்தம் என்ற தோட்டத்தில் ரசித்து விளையாடுவது இம்மயில்.

**(54)**

***ஸந்த்4யா க4ர்ம தி3 னாத்யயோ ஹரிகராகா4 த ப்ரபூ4 தானக***
***த்3வானோ வாரித3 கர்ஜிதம் திவிஷதாம் த்ருஷ்டிச் சடா சஞ்சலா।***
***பக்தானாம் பரிதோஷ பா3ஷ்ப விததிர் வ்ருஷ்டிர் மயூரீ சிவா***
***யஸ்மின்னுஜ்வல தாண்ட3வம் விஜயதே தம் நீலகண்ட2ம் ப4ஜே3।।***

இந்த சிவன் என்ற மயில், மாலை நேரத்தை மாரிக்காலமாகவும், மஹா விஷ்ணுவின் மிருதங்க ஒலியை மேகத்தின் கர்ஜனையாகவும், தேவர்களது கண்ணோக்குகளை மின்னலாகவும், அடியார்களது ஆனந்தக் கண்ணீரை மழையாகவும், பார்வதியை பெண் மயிலாகவும் கொண்டு பிரகாசமாகத் தாண்டவமாடி மகிழ்கிறது. இப்படிபட்ட நீலகண்டமயிலை நான் ஸேவிக்கிறேன்.

**(55)**

***ஆத்யாயாமித தேஜ3ஸே ச்ருதிபதை3ர் வேத்3யாய ஸாத்4யாய தே***
***வித்3யானந்த3 மயாத்மனே த்ரிஜ3க3தஸ்ஸம்ரக்ஷணோத்3 யோகி3னே।***
***த்4யேயாயாகி2ல யோகி3பி4 ஸ்ஸுரக3ணைர் கே3யாய மாயாவினே***
***ஸம்யக் தாண்ட வஸம்ப்4ரமாய ஜடினே ஸேயம் நதி: சம்ப4வே।।***

அனைத்திற்கும் ஆதியும், அளவு கடந்த ஜோதியும், மறைகளால் அறியப்படுபவரும், ஸாத்யமெனும் லக்ஷ்ய வஸ்துவும், பேரறிவு பேரானந்த உருவினரும், மூவுலகத்தைக் காப்பதில் உறுதிகொண்டவரும், ஸதா யோகிகளால் தியானிக்கப்படுவரும், தேவர்களால் பாடப்படுபவரும், மாயையை வயப்படுத்தியவரும், விரித்த சடையுடன் தாண்டவமாடி மங்களத்தை அளிப்பவருமான சம்புவான உமக்கு இந்த வணக்கமுரித்தாகுக.

**(56)**

***நித்யாய த்ரிகு3ணாத்மனே புரஜி3தே காத்யாயனீச் ரேயஸே***
***ஸத்யாயாதி3 குடும்பி3 னே முனிமன: ப்ரத்யக்ஷ சின்மூர்த்தயே।***
***மாயாஸ்ருஷ்ட ஜ3கத்த்ரயாய ஸகலாம் னாயாந்த ஸஞ்சாரிணே***
***ஸாயம் தாண்ட3 வஸம்ப்4ரமாய ஜடினே ஸேயம் நதி: சம்ப4வே॥***

*நித்ய வஸ்துவாயும், முக்குணவடிவம் கொண்டவராயும், முப்புரத்தை வென்றவராயும், பார்வதியினது பெரும் பேறானவராகவும், ஸத்தியராயும், முனிவர்களுள்ளத்தே பிரத்யக்ஷமாக விளங்கும் ஞானமூர்த்தியும், மாயையைக் கொண்டு மூவுலகத்தையும் தோன்றச் செய்பவராயும், வேதங்களின் உட்கருத்தென விளங்கிக் கொண்டிருப்பவராகவும், மாலை நேரத்தே விரித்த சடையுடன் தாண்டவத்தை மேற்கொள்பவராகவுமுள்ள சம்புவுக்கு இந்த வணக்கம் உரித்தாகுக.*

**(57)**

***நித்யம் ஸ்வோத3ர போஷணாய ஸகலானுத்3தி3ச்ய வித்தாசயா***
***வ்யர்த்தம் பர்யடனம் கரோமி ப4வத: ஸேவாம் ந ஜானே விபோ।***
***மஜ்ஜன்மாந்தர புண்யபாக ப3லதஸ் த்வம்சர்வ ஸர்வாந்தரஸ்***
***திஷ்ட2 ஸ்யேவ ஹி தேன வா பசுபதே தே ரக்ஷணீயோஸ்ம்யஹம்॥***

*அடியார்களது பாவத்தைப் போக்குவதால் சர்வர் எனப்படுபவரே! எங்கும் நிறைந்த விபுவே! எனது வயிற்றை வளர்க்கவே செல்வத்திலாசை கொண்டு பலரையும் நாடி வீணாக அலைகின்றேன், (இது வரை) உன் சேவையை அறிந்தேனில்லை. இப்பொழுது தான் என் முற்பிறவிகளில் செய்த புண்ணியம் பழுத்துப் பலன் தந்த அனைத்துள்ளும் உறைபவராக உம்மையறிந்தேன். ஆகவே, உம்மால் காப்பாற்ற பட வேண்டியவனாகிறேன்.*

**(58)**

***ஏகோ வாரிஜ பா3ந்த4வ: க்ஷிதிநபோ4 வ்யாப்தம் தமோ மண்ட3லம்***
***பி4த்வா லோசன கோ3சரோபி ப4வதி த்வம் கோடிஸூர்ய ப்ரப4।***
***வேத்3ய: கிந்ந ப4வஸ்யஹோ க4னதரம் கீத்ருக்3 ப4வேன் மத்தமஸ்***
***தத்ஸர்வம் வ்யபனீய மே பசுபதே ஸாக்ஷாத் ப்ரஸன்னோ ப4வ॥***

*பசுபதியே! தினமும் புறத்தே உள்ள இருளை விலக்கும் தாமரைத் தோழனான ஒரு கதிரவன் கண்ணுக்குப் புலப்படுகிறான். நீங்கள் கோடி சூரிய ஒளி படைத்தவர். ஆயினும், என் கண்களுக்கு ஏன் புலப்படாமலிருக்கிறீர்கள்? அந்தோ என் அஞ்ஞான இருள் எவ்வளவு கனமானதாயிருக்க வேண்டும்? அதனை அறவே நீக்கி என் கண்ணெதிரே பிரசன்னமாவீர்!*

**(59)**

***ஹம்ஸ: பத்$^{3}$மவனம் ஸமிச்ச$^{2}$தி யதா நீலாம்பு$^{3}$த$^{3}$ம் சாதக:***
***கோக: கோகநத$^{3}$ ப்ரியம் ப்ரதிதி$^{3}$னம் சந்த்$^{3}$ரம் சகோரஸ்ததா$^{2}$।***
***சேதோ வாஞ்ச$^{2}$தி மாமகம் பசுபதே சின்மார்க$^{3}$ ம்ருக்$^{3}$யம் விபோ$^{4}$ கௌரீநாத$^{2}$ ப$^{4}$வத் பதா$^{3}$ப்ஜ$^{3}$ யுக$^{3}$ளம் கைவல்ய ஸௌக்$^{2}$ய ப்ரத$^{3}$ம்॥***

*பசுபதியான பார்வதி மணாளனே! விபுவே! எவ்வாறு அன்னம் தாமரைத் தடாகத்தையும், சாதக பக்ஷி கார்மேகத்தையும், சக்ரவாகப் பறவை கதிரவனையும் சகோரப் புள் சந்திரனையும் விரும்பி நிற்கின்றனவோ, அங்ஙனமே என் மனம் ஞான மார்க்கத்தால் நாடக்கூடியதும், மோக்ஷத்தை அளிக்க வல்லதுமான உமது திருவடித் தாமரைகளை நாடோறும் விரும்பி நிற்கிறது.*

**(60)**

***ரோத$^{4}$ஸ் தோயஹ்ருத: ச்ரமேணபதி$^{2}$கச் சா$^{2}$யாம்தரோர் வ்ருஷ்டித: பீ$^{4}$த: ஸ்வஸ்த$^{2}$ க்$^{3}$ருஹம் க்$^{3}$ருஹஸ்த$^{2}$ மதிதி$^{2}$ர்தீ$^{3}$ன: ப்ரபு$^{4}$ம் தா$^{4}$ர்மிகம்।***
***தீ$^{3}$பம் ஸந்தமஸாகுலச்ச சிகி$^{2}$னம் சீதாவ்ருதஸ் த்வம் ததா$^{2}$ சேதஸ் ஸர்வ ப$^{4}$யாபஹம் வ்ரஜ$^{3}$ ஸுகம் சம்போ$^{4}$: பதா$^{3}$ம் போ$^{4}$ருஹம்॥***

*மனமே! வெள்ளத்தில் சிக்குண்டவன் கரையையும், வழிப்போக்கன் மர நிழலையும், மழைக்கு அஞ்சியவன் சொஸ்தமான வீட்டையும், விருந்தாளி இல்லறத்தானையும், ஏழையானவன் தருமச்சித்தங் கொண்ட செல்வந்தனையும், இருளில் துன்புற்றவன் விளக்கையும், குளிரால் வாடுபவன் நெருப்பையும் எப்படி அடைய விரும்புவானோ,*



*அம்மாதிரியே நீ (மனம்) அச்சத்தை அகற்றி இன்பத்தை அளிக்கும் சம்புவின் திருவடித்தாமரையை விரும்பி நிற்பாயாக!*

# திருமந்திரத்தில் நானார் விசாரம்

**ஜெ.ஜயராமன்**

***இருந்தேன் மலரளைந் தின்புற வண்டு***
***பெருந்தேன் இழைக்கின்ற பெற்றஇமையோரார்***
***வருந்தேன் நுகராது வாய்புகுதேனே***
***அருந்தேனை யாரும் அறியகிலாரே (2097)***

வண்டானதின் விடாது பொருந்தி சிறு துளி பெரு வெள்ளமாகத் தேன் சேகரிக்கும் தன்மையை உணர்ந்து சாதகனானவர் பயனடைய வேண்டும். தாமாகவே சிறு ஊற்றாக வந்து கொண்டிருக்கும் தேனாம் நான் என்னும் உணர்வாகிய விருத்தியை விடாது பின்பற்ற வேண்டும். அப்படிச் செய்யாவிடில் உள்ளமெனும் வாயில் விழுங்கப் பெறும் தேனாகப் பொருந்தும்போது பொங்கும் நான்-நான்-நான் எனும் அதிட்டானத் தேனை யாரும் அறிய முடியாது.

***தன்னையறிய தனக்கொரு கேடில்லை***
***தன்னையறியாமல் தானே கெடுகின்றான்***
***தன்னையறியும் அறிவை அறிந்தபின்***
***தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே (2355)***

மேற்சொன்னபடி தன்னை நாடிச் செல்வதற்கு இடம், நேரம் மற்றும் பொருள், எனும் தடை ஒன்றும் உண்மையில் கிடையா. அன்றி, தன்னை நாடி முழுமூச்சுடன் செல்ல, எக்காலமும் மறையாத (கெடாத) வஸ்துவாகத் தன்னையே யறிவோம். இப்படிச் செய்யாது, தன்னையறியாது, உலகறிவை சொப்பன சமான காட்சி யென்றோராமல், உண்மை என்று புணர்ந்த, தானே அந்தோ ஜீவனானவன் செத்துச் செத்துச் பிறக்கிறான் என்கிறார் திருமூலர். ஆயின், தன்னை நான் என்று உணரும் அறிவை (அவ்வாறிவாலேயே)

நோக்கி, ஞமிலி (நாய்) மோப்பத்தைக் கொண்டது போல் நாடி, மூல விருத்தியாம் அவ்வகந்தையறிவற்று அந்நிலையில் நிற்கின், ஆண்டவனான தன்னைப் புகழ்ந்தருச்சிக்கத் தானே மிஞ்சினான் என்றார்.

***நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்***
***சிவன் வரின் நானுடன் போவது திண்ணம்***
***பவம் வரும் வல்வினை பண்டே அறுத்தேன்***
***தவம் வரும் சிந்தைக்குத் தான் எதிராமே (2968)***

காலாகாலத்தில் யமனானவன் வருவான் என்று கூறின், அதனாலென்? உடனிருக்கும் ஞான வாட்கொண்டு அக்காட்சியை விட்டோழிவேன். இதன்றி, சிவபெருமான் காட்சியருளின் சரி சமமாக கைகோர்த்துக் கொண்டு அச்சர்வ வியாபகனுடன் செல்வது நிச்சயம்.

அனாதியாகத் தொடரும் மறுபிறப்பெனும் தொடர்ச் சங்கிலியின் பிரவாகமான வலிமையான வினைகளின் இறுக்கத்தை என்றோ அறுத்துக் குவித்தேன். விஷயங்களை நோக்கிய சிந்தனைகளுக்கு அளவில்லை. எனினும் தவமெனப்படும், தன்னையறிய முனைப்படும் சிந்தனை ஒன்றுக்கு மாத்திரம் ஆன்மா நேர்க்குறியாக அமையும் என்றார்.

---

## பௌர்ணமி கிரிவலம் வரும் நாட்கள் - 2011

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மே 16 | திங்கள் | இரவு 07.40 | 17 | செவ்வாய் | மாலை 05.40 |
| ஜூன் 15 | புதன் | அதிகாலை 03.30 | 16 | வியாழன் | அதிகாலை 02.30 |
| ஜூலை 14 | வியாழன் | மதியம் 01.15 | 15 | வெள்ளி | மதியம் 12.45 |
| ஆகஸ்ட் 13 | சனி | நள்ளிரவு 12.20 | 14 | ஞாயிறு | நள்ளிரவு 12.40 |
| செப்டம்பர் 11 | ஞாயிறு | மதியம் 01.50 | 12 | திங்கள் | மாலை 03.15 |
| அக்டோபர் 11 | செவ்வாய் | காலை 05.15 | 12 | புதன் | காலை 06.00 |
| நவம்பர் 10 | வியாழன் | நள்ளிரவு 12.15 | 11 | வெள்ளி | அதிகாலை 02.10 |
| டிசம்பர் 9 | வெள்ளி | மாலை 06.45 | 10 | சனி | இரவு 08.15 |

# உலகினைத் தானாய் உணர்தல் முத்தியாகும்

**சேலம் சேதுகுமாரன்**

சிறைக் கைதிகளைப் போல் நாம் கைகால்களில் விலங்கு பூட்டப்பட்டு நம் விருப்பம்போல் நடமாட முடியாமல் துயரப்படவில்லை என்பது உண்மையே. ஆனால் எத்தனை எத்தனை நோக்குகளில் நம் வாழ்க்கையை ஆராய்ந்தால் நம் விருப்பப்படி பலவற்றைச் செய்ய முடியாமல் கட்டுப்பட்டிருக்கிறோம்!

நாம் வேலை செய்யும் ஊர் நமக்கு உகந்ததாக இல்லை என்றால், நமக்குப் பிடித்த ஊருக்கு நினைத்தாற் போல் போய் விட முடியுமா? பிடிக்காத வேலையை விட்டுவிடத்தான் முடியுமா? குடும்பம் பெரிது, வேலையில்லாமல் ஒரு நாளும் இருக்க முடியாது, வேலையில் இருக்கும் போதே செலவுக்குப் பணம் போதவில்லை. மாதத்தின் கடைசி வாரத்தில் பண ஓட்டமே இருப்பதில்லை. ஆசைப்பட்ட பண்டத்தை வாங்க முடிவதில்லை. இப்படி ஏதேதோ நிறைவேறாத விருப்பங்கள். இவை நமக்கும் பொருந்தும், நம் மனைவி மக்களுக்கும் பொருந்தும். நமக்கு வயதாகி வருகிறதே! நமக்கென்று ஒரு வீடு வேண்டாமா? காலம் முழுதும் வாடகை வீட்டிலேயே காலம் கழித்துவிடுவதா? என்று மனைவி கேட்கிறாள். அவள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. ஆனால் வீடு கட்டுவது என்பது என்ன லேசான காரியமா? பல லட்சம் ரூபாய்கள் வேண்டாமா? அத்தனைப் பணத்திற்கு எங்கே போவது?

வயதான பெற்றோர்களுக்கு அடிக்கடி நோய் வருகிறது, இத்தனை வயதான பிறகு எதற்கு வைத்தியம்? இதற்கு வைத்தியம் பார்ப்பதென்றால் கொஞ்சம் செலவா, ஆயிரக்கணக்கில் செலவழிக்க வேண்டுமே! ஏதோ சுக்கு, திப்பிலி போட்டு கஷாயம் வைத்துக் குடிக்கலாமே! என் பாட்டி அப்படித்தான் செய்வாள். அவள் 100 வயது இருந்தாள் என்று காரமாக பேசுவாள் மனைவி. ஆனால் கிழவருக்கோ இன்னும் வாழ வேண்டும் என்ற ஆசை. பெரிதாக என்ன இருக்கிறது! பேத்திக்கு கல்யாணம் ஆகிப் பார்க்க வேண்டாமா? என்கிறார். வாழ்ந்தது போதும் என்ற எண்ணம் தோன்றுவதில்லை அவருக்கு.

நல்ல வேலை கிடைத்தவர்கள் திருப்தியாக இருக்கிறார்கள். இன்னும் முயற்சி செய்திருந்தால் பெரிய வேலை கிடைத்திருக்குமே, உத்தியோகத்தில் உயர்வுக்கு அதிக வாய்ப்புள்ள துறையில் கிடைத்திருக்குமே! என்றே வருத்தப்படுவோர் நம்மில் பலர் உள்ளனர். தவிர சர்க்கார் வேலை அல்லது அரசு நடத்தும் தொழில் துறைகளில் பணி செய்வோர் தனியார் துறையில எத்தனை வசதிகள் (perquisites) என்று பெருமைப்படுவர், தனியார் துறையில் உள்ளவர்கள் வேலை என்றைக்குப் போகும் என்று சொல்வதற்கில்லை. Recession வந்தால் தொலைந்தது. சர்க்கார் துறையில் இருப்பவர்களுக்கு இந்தக் கவலையே இல்லை என்று பெருமூச்சு விடுகிறார்கள். தமக்கு இல்லாததை விரும்பி ஏங்குவதே மனித இயல்பு.

சாந்தலிங்க சுவாமிகள் அருளிச் செய்த வைராக்கிய தீபம் என்ற நூலில் மனிதனின் சுபாவம் அழகாக வருணிக்கப்படுகிறது -

**அரிது பெற்றஇடினும் பெற்றதன் விருப்பமறப்**
**பெறாதன விரும்பும் உயிர்கள்**

எத்தனை உயர்ந்த பொருளைப் பெற்றிடினும் பெறாத ஒன்றை நினைத்துப் பெருமூச்சு விடுவது மனித இயல்பு.

ஒருவன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு சிற்றுண்டிச்சாலைக்கு வந்தான். அவன் நண்பன் என்னப்பா என்ன கஷ்டம் நேர்ந்து விட்டது? என்று கேட்டான். முதல்வன், லாட்டரியில் இரண்டு டிக்கட்டுகள் வாங்கினேன். ஒரு டிக்கட்டுக்குப் பத்து லட்ச ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது என்றான். இது நல்ல செய்திதானே, ஏன் இந்த முகவாட்டம்? என்று கேட்டான் நண்பன், அதற்கு முதலாமவன்,புத்தி கெட்டுப் போய் இரண்டு ரூபாய் கொடுத்து அந்த இரண்டாவது டிக்கட்டை ஏன் வாங்கினேன்? இப்படிப் பணத்தை வீணடிக்கலாமா? என்றான் துக்கத்துடன்.

ஆசை நிறைவேறுகின்ற வரையில் நெஞ்சில் ஏக்கம், நிறைவேறாதோ என்ற அச்சமும், மனக்கிலேசமும் உணாடாகிறது. நிறைவேறிய பின்னோ, மனம் அதனை விடப் பன்மடங்கு பெரிய ஆசையைத் தோற்றுவித்துக் கொண்டு, கிடைத்தது சிறியது, அதனால் என்ன பயன், இது கிடைத்தால் இன்பம் உண்டு, இல்லை என்றால் இல்லை என்று நினைத்துக் கொண்டு பெரிய பொருளுக்காக ஏங்குகிறது. பொருள் பெரிதாக ஆகப் பெறுவது மிக்கக் கடினமாகி விடுகிறது. ஆகவே ஏக்கமும் மனக்கிலேசமும் பெரிதாகி நிற்கிறது. வாழ்க்கை முழுவதுமே இவ்வகையில் ஆசை என்ற பந்தத்தால் பெருந்துயர் அடைவதைக் காட்டுகிறது, குமார தேவ சுவாமிகள் அருளிச் செய்த மகாராஜாவடிவு என்ற உயர்ந்த வேதாந்த நூலில் ஒரு பாடல்.

**தந்தை தாயர் ஆசிரியர் தாங்கள் முனிதல் தனக்கு அஞ்சிச்**
**சிந்தை கலங்கும் கௌமாரம் சிறந்த காளைப் பருவத்தில்**
**முந்து பசி நோய் காம நோய் முடுகித் தணிக்கப் பொருள் தேட**
**இந்தப் புவனத்து இரவு பகல் இடையறாத தொழில் துன்பம்!**

இந்தப் பாட்டில் மனிதர்க்குச் சிறு வயது தொட்டுப் பலவகைத் துன்பங்கள் வருவதாகக் காட்டப் பெறும்.

சிறப்பாகக் காமம் எனும் நோயினால் மனிதன் துன்பப்படுவது விளக்கப் பெறும். இந்நூலில் இதற்கு அடுத்த பாட்டில் நாம் முன்பு கூறியபடி எதைப் பெற்றாலும் அதற்கு மேல் பெரிதாக ஒன்றைப் பெறவே மனிதன் விழைகின்றான் என்பது விளக்கம் பெறுகிறது பாடல்.

தமிழில் வேதாந்த தத்துவத்தை எளிய அழகிய முறையில் வடித்துத் தந்த பெரியோர் தத்துவராயர் என்பர். அவர் இயற்றிய மோகவதைப் பரணியில் ஒரு பகுதியாக சசிவன்ன போதத்தில் புலன்வழி பெறத்தக்க போகங்கள் வெறுவருகின்ற போக முதலைகள் என்று பொருத்தமுடன் வருணிப்பார். இன்னோரிடத்தில் சம்சாரமாகிய கடல் மனம் எனும் வஞ்ச ராஜ மகரம் உறைவதே என்று குறிப்பிடுவார். வேறோர் பாட்டில்

**அளவில் அகந்தை யாமையபரி மிதமுளது**
**அவாவும் நிறைந்த ஆழமறிய அரியது!**

என்று படமெழுதிக் காட்டுவார்.

இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் அரசனுக்கு உதவியாய்ப் போரதிகாரியாகச் செல்வச் செழிப்புடன் வாழ்ந்து, அதையெல்லாம் துச்சம் என்று உதறி விட்டுத் துறவியாகித், தமிழில் எளிய நடையில் வேதாந்தப் பாடல்களை இயற்றிய தாயுமானாரின் வாக்கைச் சிறிது சுவைக்கலாம். மற்றப் புலவர்களைப் போல் அல்லாது தாயுமானார் பாடலின் பல அடிகள் மக்களிடையே சாதாரணமாக வழங்கப்படுவதை அன்பர்கள் அறிந்திருப்பார்கள். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே! என்பன போன்ற வரிகள் மக்கள் வழக்காக இருப்பது இவரின் தனிச் சிறப்பாகும்.

தாயுமானார் ஆசை பற்றியும் ஆசையால் உந்தப் பட்டுக் கிளைக்குக் கிளை தாவி அல்லற்படும் மனக்குரங்கு

பற்றியும் பல இடங்களில் பாடி இருக்கிறார். பாசங்களால் திசை திருப்பப்பட்டு வழியறியாமல் இருக்கும் நம் வாழ்வினைப் பாசாடவி என்பார். ஆசைக்கோர் அளவில்லை என்ற அவர் வாக்கு இன்று படிக்காத பலருடைய பேச்சிடையே வழங்கப் படுவதை கேட்கிறோம். இது வருகின்ற இடத்தைச் சற்றே தொடர்ந்து பார்த்துப் பயன் பெறுவோம்.

***ஆசைக்கோர் அளவில்லை அகிலம் எல்லாம் கட்டி***
***அளினும் கடல் மீதிலே***
***ஆணை செலவே நினைவர், அளகேசன் நிகராக***
***அம்பொன் மிக வைத்த பேரும்***
***நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்***
***நெடுநாள் இருந்த பேரும்***
***நிலையாகவே இரும் காயகற்பம் தேடி***
***நெஞ்சு புண் ஆவர்!***

என்ற வரிகளை அவரது பரிபூரணானந்தம் என்ற பாடலில் காணலாம். ஆசை அளவற்றது, சிறிதாகப் பிறந்த ஆசையை நிறைவேற்றினால் அது மறைந்து போவதில்லை, அது மிகப் பெரிய பேராசையாக விரிந்து நம்மை அலைக்கின்றது என்ற கருத்துக்களை எல்லாம் இனிய தமிழில் பாடிக்காட்டிவிட்டார் இத்தத்துவஞானப் பெருந்தகையார்.

இக்காரணங்களினால் இவற்றை எல்லாம் வெறுத்துத் துறந்த நிலையைப்

***பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்***
***என்னை நாடிய என் உயிர் நாதனே***
***உன்னை நாடுவன், உன் அருள் தூவெளி***
***தன்னை நாடுவன், தன்னந்தனிய னே!***

என்று அழகிய கலி விருத்தத்தில் சுருங்கக் காட்டுவர். இதற்கு முன் இருந்த நிலை, நம்மில் பெரும்பாலோர் தொடர்ந்து இருக்கும் நிலை பற்றிப் பாடுகையில்

***பொறியில் செறிஐம் புலன்கனியைப்***
***புந்திச் சுவரால் புகுந்திமுத்து***
***மறுகிச் சுழலும் மனக்குரங்கு!***

என்று கூறிக் குற்றவாளியைச் சுட்டிக்காட்டுவர். ஆசையை அடக்க முடியாது துயருறும் நிலைக்குக் காரணம் ஆசையின் எல்லையில்லாத வலிமையே என்று காட்டுவர் ஒரு பாட்டிலே,

**ஆசை எனும் பெங்காற்றூடு இலவம் பஞ்சு**
**எனவும் மனது ஆலையும்!**
**என்ற வரிகள் வாயிலாக.**

இப்பேச்சின் தொடக்கத்திலே ஆசை என்பது ஒரு விலங்கு, இதனால் கட்டப்பட்ட மனிதன் சுதந்திரத்தை இழந்து பலவழிகளில் இடர்ப் படுகிறார் என்று குறிப்பிட்டோம். இதற்கும் தாயுமானார் வாக்கினையே ஆதாரமாகக் காட்டலாம். மௌன குரு வணக்கம் என்ற பாடலில்

**ஆசை நிகளத்தினை நீர்த்தூளி பட உதறி!**

என்பார் ஞானபுலவர். இவர்க்கு முன்பு வாழ்ந்த அருணகிரிநாதர் தமது சுந்தரனுபூதியில்

**ஆசாநிகளம் துகளாயின பின்**
**பேசா அனுபூதி பிறந்ததுவே!**

என்று பாடுவார்.

தத்துவ ஞானிகள் பலரும் ஆசையை விலங்குக்கு ஒப்பிடுவர். ஆசை மட்டும் அல்லாது தான் என்ற அகங்காரமும் மனிதனை அடக்கி ஒடுக்கும் தளையாக, விலங்காகச் செயல் படுகிறது. யோசித்துப் பார்த்தால் இவ்விரண்டு தளைகளும் ஒரு வகையானவையே என்பது புலப்படும். நான் அந்தப் பொருளை விரும்புகிறேன்! என்பது தான் சாதாரணமாக விருப்பத்தை வெளியிடப் பயன்படுத்தப் பெறும் வாக்கியம். இதில் விரும்புகிறேன் என்பது ஆசையைக் குறிப்பிடுவது, நான் என்பது அகங்காரத்தைக் காட்டும் சொல். ஆசை என்பது எனக்கு ஒன்று கிடைக்க வேண்டும் என்பதே அல்லவா! ஆகவே, அகங்கார மமகாரங்களோடு ஆசை பிரிக்க முடியாமல் இணைக்கப் பட்டது.

இப்படி அல்லாது ஆசையுடன் நேரிடையாக இணைக்கப் பெறாத அகங்கார வகைகளும் உண்டு. அவன் என்னை மதிக்கவில்லை!, என் பேச்சைக் கேட்டாளா அவள்!, என் அனுமதி இல்லாமல் எதுவும் நடக்கக் கூடாது! என்றும் நாம் பல சூழ்நிலைகளில் உறுதியாகக் கடுமை தோன்றக் கூறப்படுவதைக் கேட்டிருக்கிறோம்.

இன்னும் வரும்..

# இனிவரும் திருநாட்கள் . . .

## ரமண பக்தர்களுக்கு விசேஷ நாட்கள் - 2011

| | | | |
|---|---|---|---|
| மே | 26 | வியாழன் | மஹாபூஜை |
| ஜூலை | 12 | செவ்வாய் | பசு லட்சுமி தினம் |
| ஆகஸ்டு | 13 | சனி | குருபூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | வியாழன் | பகவான் அருணையடைந்த தினம் |
| | 28 | புதன் | நவராத்திரி விழா ஆரம்பம் |
| அக்டோபர் | 5 | புதன் | சரஸ்வதி பூஜை |
| | 6 | வியாழன் | விஜயதசமி |
| | 26 | புதன் | தீபாவளி |
| நவம்பர் | 29 | செவ்வாய் | கார்த்திகை உற்சவம் தொடக்கம் |
| டிசம்பர் | 8 | வியாழன் | கார்த்திகை தீபத் திருநாள் |

# ரமணோதயம் காப்பு நிதி தொடரும் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| ஸ்ரீமதி. மல்லிகா சுவாமிநாதன், சென்னை 34 | 1000 |
| திரு. கே.வி. நாராயணன், திருவண்ணாமலை | 1000 |
| திரு. சி. நாராயணமூர்த்தி, சென்னை 44 | 1000 |
| ஸ்ரீமதி. சாந்தா ராமன், சென்னை 41 | 1000 |
| திரு. ஆர். சுப்ரமணியன், பெங்களூர் | 650 |

# நான் யார் தெரியுமா? துவக்கம் முதல் நான் யார் வரை

டாக்டர் ஏ.வி.ராஜகோபாலன்

நண்பர்கள் சிலர் ஒரு ஆன்மீக சொற்பொழிவிற்குச் சென்றார்கள். சொற்பொழிவாளர் அனுபவமிக்க சிறந்த பேச்சாளர். அவர் தற்காலத்திற்குப் பொருத்தமான நிகழ்வுகளைக் கோர்த்து, அவற்றை இந்திய வேதாதந்த கருத்துக்களுடன் எப்படி ஒத்துப் போகின்றன என்று விளக்கி காட்டினார். நண்பர்கள் அனைவரும் அந்தப் பேச்சில் மனதைப் பறிகொடுத்தனர். வீடு திரும்பும் வழியில் அந்தக் கருத்துக்களையே திரும்பத் திரும்பச் சிந்தித்து தங்கள் கருத்துகளையும் பரிமாறிக் கொண்டனர்.

போகும் வழியில் ஒரு சிற்றுண்டி சாலையைப் பார்த்தார்கள். சிறிது உணவு கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் உள்ளே சென்றனர். சிற்றுண்டிகளின் மணம் நாவில் நீர் ஊறச் செய்தது. ஒருவன் சொன்னான் இங்கு நெய் ரோஸ்ட் மிகவும் சுவையாக இருக்கும், வேறு ஒருவனுக்கு ஊத்தப்பத்தின் மேல் விருப்பம். விருப்பப்பட்ட உணவினை அவர்கள் உண்டு மகிழ்ந்தனர்

சிற்றுண்டிச் சாலையை விட்டு வெளியே வந்தவுடன் ஒருவன் அந்த வேதாந்தக் கருத்துக்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தான். அப்பொழுது அருகிலிருந்த டீக்கடையில் இருந்து ஒரு புகழ் பெற்ற திரைகானம் ஒலிப்பரப்பப்பட்டது. நண்பர்களின் கவனம் அதில் திரும்பியது. அருமையான

ட்யூன், அருமையான வரிகள் என்று அந்தப் பாடலைப் பாராட்டி ரசிக்கத் துவங்கினார்கள். பாருங்கள், எப்படி விஷய வஸ்துக்களின் கவர்ச்சி, ஆன்மிகப் பாதையிலிருந்து திசை திருப்புகிறது என்பதை.

மேற்கூறிய கற்பனைக் கதை கடோபநிஷத் என்ற புகழ்பெற்ற உபநிடத்தில் ஒரு அழகிய உருவகத்தின் மூலமாக விளக்கப்படுகிறது. இதில் இந்த மனித உடல் தேர் வடிவத்தில் சித்தரிக்கப்படுகிறது. இந்த ஜீவாத்மா அந்தத் தேரின் சொந்தக்காரன். அவனுடைய புத்தியே சாரதியாக தேரை இயக்குகிறது. சாரதியாகிய புத்தி மனம் என்கின்ற கடிவாளத்தின் மூலம் ஐந்து குதிரைகளை இயக்குகிறது. இந்தக் குதிரைகளே ஐம்புலன்கள் (கண், காது, மூக்கு, நாக்கு, தோல்) - இந்தத் தேர் மனிதனைக் கவரும் விஷய சுகங்கள் என்ற பாதைகளில் பயணிக்கிறது.

இந்த உருவகம் நமக்குப் பல உண்மைகளை விவரிக்கிறது. எப்பொழுது புத்தி, மனம், இந்திரியங்கள் என்கின்ற இவை யாவும் அந்த ஜீவாத்மாவின் கட்டுப்பாட்டில் அடங்கியிருக்கின்றனவோ அப்பொழுது வாழ்க்கைத் தேர் மெய்யுணர்வை நோக்கிய இராஜபாட்டையிலே வேகத்துடன் பயணத்தைத் துவக்குகிறது. ஆனால் இதில் பல குழப்பங்கள் நேரிட வாய்ப்பு இருக்கிறது. ஜீவனுக்கே எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்ற குழப்பம் ஏற்படலாம். புத்தி என்கிற சாரதி அவன் நோக்கத்தைச் சரிவர அறியாவிட்டால் பாதை தவறிவிடும். மனம் என்கிற கடிவாளம் சாரதி சொற்படி கேளாவிட்டால் குதிரைகளைக் கட்டுப்படுத்த இயலாது. புத்தியும், மனமும் ஒருங்கிணைந்தாலும், இந்திரியங்கள் என்கின்ற குதிரைகள் சரியான முறையில் பயிற்றுவிக்கப்படாவிட்டால் அவை ஒழுங்கான பாதையை விட்டு, பசும்புற்கள் நிரம்பிய கவர்ச்சி இடத்தை நாடி,

தறிகெட்டு ஓடத்துவங்கிவிடும். அப்போது தேரோட்டம் சீராக அமையாது.

நாம் ஆரம்பத்தில் சில நண்பர்களின் அனுபவத்தைப் பார்த்தோம். தத்துவக் கருத்துகளிலே மனதும் புத்தியும் ஈடுபட்டபோது அவர்களின் எண்ணங்களெல்லாம் ஒரு குறிப்பிட்ட பாதையில் சஞ்சரித்தன. இடையிலே சிற்றுண்டி சாலை அவர்களது நாக்கு என்கிற இந்திரியத்திற்கு ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது. அது சாரதியின் விருப்பத்திற்கு எதிராக வேறொரு பாதையிலே தேரை இழுத்தது. சிற்றுண்டிச் சாலையை விட்டு வெளியில் வந்தவுடன் புத்தியாகிய சாரதி தேரை மீண்டும் வேதாந்த பாதையிலே திருப்ப முயற்சி செய்தான். அப்பொழுது திரைப்பட இசை, செவி என்கிற புலனைக் கவர்ந்து இழுத்தது. தேர் மறுபடியும் தள்ளாடத் துவங்கியது. இப்பொழுது உபநிடத்தின் வாக்கியங்களைப் பார்ப்போம்.

***ஆத்மானாம் ரதினம் வித்தி, சரீரம் ரதமேவ து ।***
***புத்திந்து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹ மேவச ।।*** ***(3.3)***
***இந்திரியாணி ஹயானாஹுர் - விஷயாம்ஸ் தேஷுகோசரான் ।***
***ஆத்மேந்த்ரிய - மனோயுக்தம் போக்தேத் யாஹுர் - மநீஷிண: ।।***
***(3.4)***

இந்த உருவகத்தில் புத்தியென்பது “Rational Brain” என்பதையும் மனம் என்பது “Emotional Intelligence” என்பதையும் குறிக்கும் என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் சற்று விளக்கமாகப் பார்த்தால் புத்தி என்பது விவேகம் என்ற பொதுக் கருத்தைக் குறிப்பதாக அமையும். அந்த நிலையில் மனம் என்பது கடிவாளம் என்ற நிலைக்குப் பொருத்தமாக அமையும். ஆங்கிலச் சொற்கள் இந்தக் கருத்தைச் சரியான முறையில் பிரதிபலிக்க முடியாது.

இதே கருத்தை கீதாசாரம் பகவத்கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் ஸ்திதபிரக்ஞன் என்ற நிலைப்பாட்டால் விவரிக்கிறது. புலன்களின் வசப்படாமல் ஆமைபோல தன் வைராக்கியம் என்ற ஓட்டிற்கு உள்ளே தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் (கூர்மோங்கானீவ சர்வ:) என்று அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். இந்த நிலையை அடைவது எளிது அல்ல. பலவித சபலங்கள், ஆசைகள் போன்றவை குறுக்கிட்டு மனத்தைப் பேதலிக்கச் செய்கின்றன. (நாபினந்ததி, நத்வேஷ்ட: தஸ்ய பிரஞா பிரதிஷ்டிதா).

இவற்றைத் தவிர்த்து உறுதியான உள்ளத்தோடு வைராக்கிய நிலையை எய்த வேண்டும் என்கின்ற ஒரே கோட்பாட்டுடன் பாடுபடுபவனே உயர்நிலையை எய்துகிறான். கடோபநிஷதம் இதற்கும் வழிகாட்டுகிறது-

உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வராந் நிபோதத!

இந்த முழக்கத்தையே சுவாமி விவேகானந்தர் தன்னுடைய தாரக மந்திரமாகக் கொண்டார். எழுமின்! விழுமின்! குறி சேரும் வரை நில்லாது என்ற அவருடைய வீர கோஷம் இந்திய இளைஞர்களுக்கு மாபெரும் உற்சாகத்தை அளித்து வருகிறது. ஆனால், இந்த நிலையை எய்துவது சுலபம் அல்ல என்று இந்த உபநிடதம் ஒப்புக் கொள்கிறது. இந்த வழி கத்தியின் நுனிமேல் நடப்பது போன்றது (க்ஷுரஸ்ய தாரா நிசிதா துரத்யயா துர்கம் பதஸ்-தத்-கவயோ வதந்தி).

நான் யார்? என்ற கேள்விக்குத் துல்லியமான விளக்கம் இந்த உபநிடத்தில் கிடைக்கப் பெறுகிறது. நான் என்ற சொல் ஆத்மா-புத்தி-மனம்-புலன்கள் என்ற அமைப்பு கொண்ட தேரைப் போன்றது. ஜீவாத்மா இந்த அமைப்பின் தன்மையை சரிவர புரிந்து கொண்டால் அகங்காரம் என்ற நிலையைக் கடந்து நான் கர்த்தா அல்ல என்ற பெரிய வட்டத்தை

அடைகிறான். இந்த நிலை சாதகனுக்கு வேதாந்தப் பாதையிலே பிரவேசிக்க ஒரு அனுமதிச் சீட்டு போல அமைய பெறுகிறது. அந்தப் பாதையிலே அவர் தேரோட்டம் செவ்வனே அமைய அவனுக்கு ஞானம், வைராக்கியம் என்ற இரண்டு விளக்குகள் தேவைப் படுகிறது.

இத்தகைய ஒரு தலைசிறந்த தேரில் சிவபக்தி என்ற பாதையிலே திருநாவுக்கரசர் பயணம் செய்தார். அவர் புலன்களெலாம் சிவன் வசம் ஒருமைப்பட்டு அமைந்த சமயத்திலே சமணர்கள் அவரை எரிகின்ற சுண்ணாம்புக் காளவாயில் அடைத்துத் துன்புறுத்த முயன்றனர். ஆனால் சிவன் வசப்பட்டிருந்த அவருடைய புலன்கள் வெளியிலே ஏற்பட்ட துன்பங்களால் பாதிக்கப்படாது, சிவன் என்னும் ஜோதியிலே ஐக்கியப்பட்டுக் கிடந்தமையால், அந்தச் சுண்ணாம்புக் காளவாயிலும் அப்புலன்கள் பேரின்பத்தை எய்தின. கீழ்காணும் தேவாரப் பாசுரம் நாவுக்கரசரின் இந்நிலையை விளக்கும்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே**

இந்த உபநிடத்தின் விளக்கங்கள் வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டுள்ள எல்லா சாதகர்களுக்கும் ஒரு பெரிய விருந்தாகும். நசிகேதஸ் என்ற சிறுவனின் தத்துவ பயணமே இந்த உபநிடத்தின் பின்புலம். எந்தவகை சித்தாந்தத்தை அனுசரிப்போருக்கும் இந்த உபநிடதம் பல அறிய உண்மைகளை உபதேசிக்கிறது. நான் யார் என்ற வினாவுக்கு விடை காணும் தூரத்தை நாம் நெருங்கிவிட்டோம்.

நமது உபநிடத்தேரின் உருவகம், வேதாந்தத்திற்கு மட்டுமல்ல, இன்றைய நிர்வாக நடைமுறைக்கும் மிகப் பொருத்தமாக இருக்கும் என்பது திண்ணம்.

*இருந்தொளிர் உனை அறிவு உறுத்திடர்க்கு என்றே*
*இருந்தனை மதந்தொறும் விதவித உருவாய்*
*இருந்து ஒளிர்உனை அறிகிலர் எனில் அன்னோர்*
*இரவியின் அறிவு அறு குருடரே ஆவர்.*

அருணாசலா!
எங்கும் சத்தாகவும் சித்தாகவும் இருந்து விளங்கும்
பரம்பொருளே!
உனது உண்மையை அறிவித்து
உணர்த்திடுவதற்கு என்றே ஒவ்வொரு மதத்திலும்
நீ ஒருவனே பலவிதமான உருவாய்
தோற்றமளிக்கிறாய்
இவ்வாறு இருந்து பிரகாசிக்கும் உன்னை
அறிந்து கொள்ளதவர்கள்
சூரியன் இருப்பதை அறிந்து கொள்ள முடியாத
பிறவிக் குருடர்கள் ஆவர்.

- ரமணர் அருளிய அருணாசல அஷ்டகம்

## அருணாசலனை வேண்டி

# Railone Projects Pvt. Ltd.,
# HYDERABAD

Advt

# தொண்டை மண்டலம் - ரமண தொண்டர் மண்டலம்

**ஆகுரா**

> **சித்சொரூப சந்நிதிவாய் ஏய்ந்த அதிசாமானிய உயிரும்**
> **உந்நதமாம் அச்சொரூபம் உற்று ஒளிரும்**

எனும் ரமண புராணம் வரிகளுக்கு ஏற்ப மகான்களின் சந்நிதி அடைந்த மாத்திரத்திலேயே ஒருவர் ஒரு உன்னதமான அமைதி நிலையை அடைவர். அத்தகைய ஓர் ஆன்ம அமைதியை அருணாசல ரமண சந்நிதியில் அடைந்த மகான் மஸ்தான் சாயுபு அவர்கள். அவர் ஓர் உயர்ந்த ஆன்ம நிலையில் இருந்தார் என்பதை பகவான் ரமணரே கூறக் கேட்டுள்ளோம். மகான் மஸ்தான் சாயுபு அவர்களின் சமாதி சேத்துப்பட்டுக்கு அருகே உள்ள மடம் என்னும் ஒரு சிறிய கிராமத்தில் அமைந்துள்ளது. சமீப காலத்தில் இச் சமாதிக் கோயிலை புனருத்தாரணம் செய்வித்து ஸ்ரீ ரமணாச்ரமம் நன்றாகப் பராமரித்து வருகின்றது. அங்குச் செல்லும் ஒவ்வொரு முறையும் அங்கு நிலவும் ஆழ்ந்த அமைதி அருகிலுள்ள குளம், அந்த ஆல மரங்கள் மற்றும் அருகேயுள்ள தீர்த்தவாரி கல்மண்டபம் என அனைத்தும் நமது மனத்தை ஈர்த்து அமர்த்தி விடுகிறது.

இங்கு ஒரு நாளேனும் தங்கி வாழ்ந்து பார்க்க வேண்டும் என்னும் ஆவல் அங்குச் செல்லும்போதெல்லாம் எழுவதுண்டு. ஆனால் இங்கு இதுவரை ஒருவரும் இரவு தங்கிப் பார்த்ததில்லை என்று திரு. சந்திரமௌளி (ஸ்ரீ

ரமணாச்ரமம்) கூறியது நம்மைச் சிந்திக்க வைத்தாலும் நெடுநாளைய ஆர்வம் தலைதூக்க இங்குத் தங்கிப் பார்க்கத் தீர்மானித்தோம். இவ்வாண்டு மார்ச் 8 முதல் 10 வரை மூன்று நாட்கள் தங்குவது எனத் தீர்மானித்து நானும் எனது நண்பர் திரு. ஆராவமுதனும் சென்னையிலிருந்து புறப்பட்டோம். புறப்படுமுன் இச்சமாதிக் கோயிலை மேற்பார்வையிட்டு வரும் ஆசிரியர் திரு. சுந்தரமூர்த்தி அவர்களுக்குத் தகவல் அளித்தோம். சாப்பாடு ஒரு பிரச்சினை என அறியப்பட்டது. நான் சைவமாக எதையும் உண்பவன். எனது நண்பரோ எதையுமே உண்ணாமல் இருப்பதில் சமர்த்தர். எனவே உணவை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. மாலை 5 மணியளவில் வந்தவாசி வழியாக சேத்துப்பட்டுக்கு 11 கிலோமீட்டர் முன்பாக மழையூரைத் தாண்டியதும் 'ஏந்தல்' சந்திப்பில் இடதுபுறமாக 5 கி.மீ. பயணப்பட்டு அழகிய மடம் கிராமம் வந்தடைந்தோம். சாலை சற்று மோசமாகத் தான் இருக்கிறது. கிராமத்தின் முகப்பிலேயே அழகிய குளக்கரையில் அமைந்துள்ளது மஸ்தான் அவர்களது சமாதி திருக்கோயில். சுத்தமாகப் பராமரிக்கப்படும் இக்குளத்தின் நீர்தான் இக்கிராம மக்களுக்குக் குடிநீர்.

குளத்தின் கரைகளில் விழுது விட்டு நிற்கும் ஆலமரங்கள். அங்கேயே தீர்த்தவாரிக் கல்மண்டபம். மண்டபத்தின் உள்ளே சிவன், அம்பாள் என சிவ குடும்பமே அமைந்துள்ளது. பாழடைந்த நிலையில் இருந்த மண்டபம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இக்கிராமத்தில் அமைந்துள்ள தாடகேஸ்வரர் சிவன் கோயிலும் சிதிலமடைந்து தற்சமயம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் தொல்பொருள் துறை இவற்றை ஏற்று மக்களின் உதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது. பண்டு இக்கோயிலின் சப்பிரமே மஸ்தான் அவர்களின் புனிதத் திருமேனியை அவர் உயிர் நீத்தபின்

*தாங்கிச்சென்று அவரைச்சமாதி வைக்க உபயோகப்படுத்தப் பட்டது. மஸ்தான் அவர்கள் 1931ஆம் ஆண்டு சமாதியடைந்தார். பகவான் ரமணருக்கு தேசூர் அகிலாண்டம்மாள் அவர்களுடன் கூடச் சென்று திருவண்ணாமலையில் சேவை செய்தவர். ஏழை நெசவாளியான இவர் பகவானுக்குத் துண்டும் கௌபீனமும் நெய்து கொண்டு செல்லுவது வழக்கம். தேசூர் அகிலாண்டம்மாளும் இவரும் சேர்ந்து 1914-ஆம் ஆண்டு தேசூரில் ரமண மடாலயம் நிறுவினர். அங்கிருந்து இவர் பிறகு மடம் கிராமத்திற்கு இடம் பெயர்ந்தார். பலதரப்பட்ட இன மக்களாலும் ஒவ்வோராண்டும் இவரது சமாதி நாள் குரு பூஜையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவரது சமாதிக்கு நிலம் தானமாகக் கொடுத்தவர் திரு. முனுசாமிக் கவுண்டர் அவர்கள். அவரது சமாதியும் மஸ்தான் சமாதிக்கருகிலேயே அமைந்துள்ளது. இவரது உயிலின்படி இங்குள்ள நந்தவனத்திலிருந்து பூக்கள் கொய்யப்பட்டு உள்ளூர் சிவன் கோயிலுக்கு பூஜைக்குச் சென்றடைய வேண்டும். இதற்கான தொண்டை தனது சந்ததியர் செய்ய வேண்டும் என்பது ஒன்றாகும். இவரது சந்ததியைச் சார்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. சுந்தரமூர்த்தி அவர்கள் இக்கோயிலை ரமணாச்ரமத்தின் உதவியுடன் பராமரித்து வருகிறார். மஸ்தான் அவர்களின் சமாதி இன்று ரமணாச்ரமத்தினரால் நன்கு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அதைச் சுற்றி நந்தவனம், மின்வசதி மற்றும் ஆழ்கிணறு எனச் சிறப்பாக அமைந்துள்ளது. இம்மகானின் சமாதித் திருக்கோயில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட பின்னரே இவ்வூரின் சிதிலமடைந்த சிவன் கோயில் சீரமைப்புப் பணி துவங்க முடிந்தது. மஸ்தான் அவர்களின் சமாதிக் கோயில் சீர்பட்டால் தான் தன் கோயிலும் சீர்படும் என்று அந்தத் தாடகேஸ்வரர் கூறுவதுபோல் அமைந்துள்ளது இந்நிகழ்வு.*

இத்திருக்கோயிலின் வளாகத்தில் ரமணாச்ரமத்தினரால் தங்குவதற்கான அறை, குளியல் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இங்குத் தங்கும் அறையில் இதுவரை யாரும் தங்க வேயில்லை. எனவே எங்களது பொருட்களை மட்டும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்டோம். திரு. சுந்தரமூர்த்தி அவர்களின் இல்லத்திலிருந்து நாங்கள் தங்கிய மூன்று நாட்களும் எங்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இங்குத் தங்க விரும்பும் அன்பர்கள் தாங்களே சமைத்துண்ண ஏதுவாக தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டு வருவது உசிதம். ஒவ்வொரு முறையும் இக்குடும்பத்தினர் இடர்ப்படுவது தவிர்க்கப் படலாம். நாங்கள் சமாதிக் கோயிலின் மண்டபத்திலேயே உறங்கினோம். மேலே கூரை. கீழே நன்கு சுத்தமாகப் பராமரிக்கப்பட்ட கட்டாந்தரை. நாற்புறமும் சுவர்களின் தடையின்றி வீசும் இயற்கைக் காற்று. இதுதான் நாங்கள் மூன்று நாட்களும் பகலும் இரவும் பயன்படுத்திய உறைவிடம். நன்கு வளர்ந்த வில்வமரம், நந்தவனத்தில் வளரத் துடிக்கும் நாகலிங்கக் கன்று மற்றும் பல்வேறு மரக் கன்றுகளும், பூத்துக் குலுங்கும் பூஜைக்குரிய குட்டையான நந்தியாவட்டைச் செடிகள் - பகல் முழுவதும் மரங்கொத்தியின் ஓசை - காலை மாலைகளில் பட்ட பனைமரத்தில் தன் கூட்டிற்குத் திரும்பும் கிளிகளின் ஓசை. இவையல்லாது எப்பொழுதும் அமைதியைப் பரப்பும் மகான் மஸ்தான் அவர்களின் சந்நிதி. உன்னதமான இவ்விடத்தில் நமது இருப்பு நம்மையும் உயர்த்துகிறது. இவ்விடத்தைச் சுத்தமாக வைத்து பூஜித்து வருபவர் திரு. குள்ளக் கவுண்டர் அவர்கள். தனது சேவையின் மூலம் தனது வயோதிகத்திலும் வாலிபத்தை உணர்த்துகிறார். இரவு எங்களுக்குத் துணையாக எங்களுடன் உறங்கி பகலில் எங்களுக்குச்

*சேவை செய்யும் திரு. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு உதவியாகவும் இருக்கிறார்.*

*கடைசி நாளன்று அருகில் (5 கி.மீ.) இருக்கும் தேசூர் ரமண மடாலயத்திற்கு நண்பகலில் பயணப்பட்டோம். பாதை மிகவும் அருமையாக இருந்தது. தேசூரின் மேற்கே அமைந்துள்ள ரமண மடாலயம் நாம் ஏற்கெனவே கூறியது போல் 1914-ஆம் ஆண்டு அகிலாண்டம்மாள் மற்றும் மஸ்தான் அவர்களால் நிறுவப்பட்டது. செல்லும் வழியெல்லாம் ரமண மடாலயத்திற்கான அம்புக் குறி வழிகாட்டுகிறது. நாங்கள் சென்றபொழுது பகல் 12 மணியானதால் மடாலயம் பூட்டப்பட்டிருந்தது. எனினும் அதனைச் சுத்தம் செய்து வரும் எதிர் வீட்டில் குடியிருக்கும் பெண்மணி மடத்தைத் திறந்து விட்டார். உள்ளே அழகிய சிறிய சிவன் கோயில். அப்பொழுதுதான் பூஜை முடிவடைந்திருந்தது அறியப்பட்டது. உள்ளே ஒரு கிணறு. அதனையடுத்துப் பல அறைகள். தியான அறை, பூஜை அறை என்று நம்மைக் கவர்ந்தாலும் அடுக்களை உள்ளே நுழைந்தவுடன் இங்குத்தான் பகவான் ரமணருக்கு முறுக்கு தயாரிக்கப்பட்டது என்ற அறிவிப்பு நம் சிந்தனையைப் பின்னோக்கிச் செலுத்தியது.*

*இந்த மடாலயத்தின் ஒவ்வொரு இடமும் திருமதி. அகிலாண்டம்மாள் மற்றும் இங்கு வாழ்ந்த ரமண அன்பர்களின் நிகழ்வுகள் நம்மால் நிதர்சனமாக உணரப்பட்டது. திருவண்ணாமலையில் நோய்வாய்ப்பட்ட ரமண அன்பர்களை இங்கு அழைத்து வந்து குணப்படுத்தியபின் மீண்டும் திருவண்ணாமலையில் கொண்டு சேர்ப்பர் என்பதாகிய நினைவுகள் நம்மை மெய்சிலிர்க்க வைத்தன.*

*சில ஆண்டுகளுக்கு முன்னர் எனது நண்பர் மற்றும் அவரது பெற்றோர்களை ரமணாச்ரமத்தில் தங்க வைக்கும்*

பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பின்னர் அவர்கள் சென்னை திரும்பியவுடன் ஒரு நண்பர் எனது நண்பரின் தகப்பனாரிடம் ‘தங்கள் அனுபவம் எப்படி?’ என்று விசாரித்தார். அதற்கு ‘ஆகா, என்ன அருமை!’ என்றார் பெரியவர். ஆவலுற்ற அன்பர் அது என்ன என்று வினவ, முதியவரோ அந்த ரசமிருக்கிறதே என்று ரமணாச்ரம உணவைச் சிலாகித்தார். ஆன்மானுபவம் ஏதேனும் கூறப் போகிறார் என்று நினைத்த நண்பர், ‘அடச் சே, சாப்பாட்டு விஷயமா’ எனக் கேலியாகப் பேசினார். ஆச்ரம உணவு வெறும் சோற்று அனுபவமா - கேலிக்குரியதா - எனச் சிந்தித்தால்அதுஅப்படியல்ல.பகவானின்காலத்திலிருந்தே உணவு மூலம் பகவான் நமக்கு அளித்த உபதேச அனுபவங்கள் ஒருவர் எழுதத் துவங்கினால் அந்த பாகசாலை அனுபவங்கள் பாகம் பாகமாக வளர்ந்து கொண்டே போகும். மகாத்மா காந்தி அவர்கள் ரமணாச்ரமம் வந்தவரில்லை. எனினும், பாபு ராஜேந்திர பிரசாத், ஜம்னாலால் பஜாஜ் மற்றும் சரோஜினி நாயுடு எனப் பல பெரியோர்களை அங்குச் செல்லத் தூண்டினார். அவர்களெல்லாம் கூறக்கேட்ட பல அனுபவங்களில் ரமணாச்ரம இட்லி சிறப்பும் ஒன்று. எனவே மகாத்மாவிற்கு எங்கு இட்லி பரிமாறப்பட்டாலும், ரமணாச்ரம இட்லியா என்று வினவுவாராம். ஏன் இவற்றையெல்லாம் கூறுகிறோம் என்றால் இந்தத் தேசூர் அகிலாண்டம்மாள் பல ஆண்டுகளாக பகவான் ரமணருக்கு அமுது படைக்கும் பாக்கியம் படைத்தவர். அவர் உணவு வழங்கும் பொழுதெல்லாம் பகவானிடமிருந்து இவ்வுணவின் மூலம் அடைந்த ஆன்ம உபதேசங்கள் அநேகம். இந்த முறுக்கு சுட்ட அடுப்பை நாம் காணும் பொழுது அன்று நடந்த ஒரு நெகிழ்வான நிகழ்வு நம்மைத் தாக்கியது.

ஒருமுறை பகவானுக்கு முறுக்குப் பலகாரம் செய்து எடுத்துக்கொண்டு, கந்தாச்ரமத்திலிருந்த பகவானை

*அகிலாண்டம்மாள் காணச் சென்றார். ஆனால் அன்றைக்கு நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களாகிய அன்பர்கள் சிலரும் அவரைப் போலவே முறுக்கு செய்து கொண்டு வந்திருந்தனர். அவைகள் நல்ல நிறத்துடன் அழகான வடிவத்தில் சுற்றப்பட்டிருந்தன. அவற்றைக் கண்டு நாணி தேசூரம்மாள் தனது முறுக்கைப் பகவானிடம் படைக்க சற்றே மனமில்லாதவராயிருந்தார். பகவான் ரமணர் செட்டிமார்களின் முறுக்கை ஒரு துண்டை மட்டும் விண்டு உண்டபின் அனைத்தையும் மற்றவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்படி கூறினார். பிறகு தேசூரம்மாள் பகவானின் முன் தான் செய்து கொண்டு வந்த முறுக்கை வைத்தார். பகவானோ ஒரு முறுக்கை முதலில் தின்றபின் அடுத்தடுத்து இன்னும் இரண்டு முறுக்குகளையும் உண்டார். அருகிலிருந்த மஸ்தான் சுவாமியைப் பார்த்து பகவான், 'மஸ்தான் இதில் என்ன கலந்திருக்கிறது? இவ்வளவு சுவையாக இருக்கிறதே!' என்று வினவினார். பகவானின் அருள்விலாசம் இன்றும் எண்ணும்பொழுது இவ்விடத்தில் நம்மை நெகிழ வைக்கிறது.*

*இந்தத் தேசூர் மடாலயம் நிறுவப்பட்டது 1914-ஆம் ஆண்டு. வரும் 2014-ஆம் ஆண்டு இதற்கான நூற்றாண்டாகும். அக்காலத்தில் இம்மடாலயத்தில் தினந்தோறும் அருணாசல அட்சரமணமாலை மற்றும் சிவபுராணம் பாராயணம் செய்யப்படும் என அறிகிறோம். அட்சரமணமாலைத் தோற்றம் 1914-ஆம் ஆண்டு எனக் கருதப்படுகிறது. எனவே வரும் 2014-ஆம் ஆண்டு அருணாசல அட்சரமணமாலைத் தோற்றத்திற்கான நூற்றாண்டாக அமைகிறது. ஆக இவ்விரண்டு நிகழ்வுகளும் 2014-ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவாக சேர்ந்து கொண்டாடப்பட வேண்டும் என்பது இங்குள்ள அன்பர்களின் ஆர்வம். அதற்கான யத்தனங்கள் துவங்கப்பட உள்ளன.*

*இறுதியாகத் தொண்டை மண்டலமே ரமண தொண்டர்களின் தொண்டர் மண்டலம் எனப் போற்றத்தக்கது. மடம் கிராமத்தை மையமாகக் கொண்டு தங்கும் அன்பர்கள் அருகிலுள்ள தேசூர், படவேடு மற்றும் வள்ளிமலை என ரமண அன்பர்கள் வாழ்ந்து தொண்டாற்றிய திருத்தலங்களை தல யாத்திரையாகக் காணலாம் என உணர்கிறோம். சென்னையிலிருந்து திருவண்ணாமலை வரும் அன்பர்கள் பொதுவாக திண்டிவனம், செஞ்சி வழியாக வருவது வழக்கம். ஆனால் சென்னை, காஞ்சி, வந்தவாசி வழியாக வரும்பொழுது மடம் மற்றும் தேசூர் என்னும் இரு புனிதத் தலங்களை தரிசித்து திருவண்ணாமலை வருவதால் அவர்கள் செலவிட வேண்டிய அதிக தூரம் 20 முதல் 30 கி.மீ. வரை தான் இருக்கும். ஆனால் ரமண தொண்டர் மண்டலத்தைக் கண்டு வரும் பாக்கியம் அமையும்.*

*தொடர்புக்கு:*

*மடம்: திரு சுந்தரமூர்த்தி - **9942264556***

*தேசூர்: வந்தவாசி டாக்டர் ரவி: **9787180757***


# ரமணோதயம்

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770
ராஜேஷ் M.S. 9840075778
வஸந்தா ராகவன் 9445432335

## ஸ்ரீ ரமணானந்த மடாலயம்

*1900ஆம் ஆண்டில் பால ரமணர் சத்குருசுவாமி ஆலமரகுகையில் தரிசித்து அவ்வப்போது பகவான் மற்றும் பக்தர்களுக்குஅன்னத்தொண்டுஆற்றியஅகிலாண்டம்மாள் தனது ஊரான தேசூரில் 1914ஆம் ஆண்டு நிர்மாணம் செய்த 'ஸ்ரீ ரமணானந்த மடாலாயம்''.*

*தொடர்பிற்கு: வந்தவாசி டாக்டர் ரவி (பொறுப்பாளர்) தொலைபேசி: 97871 80757*

*தேசூர் கிராமம் திருவண்ணாமலை-வந்தவாசி நெடுஞ்சாலையில் மழையூர் கூட்டுப்பாதையில் தெற்கே 8 கி.மீ. தூரத்தில் உள்ளது.*

## மஸ்தான் சுவாமி சமாதி



*தேசூரம்மாளுக்குத் துணையாக இருந்து வந்த மஸ்தான் சுவாமியும் பல ஆன்மீக அனுபவங்களை ரமண கருணையால் அடைந்து 1931-ஆம் ஆண்ட சமாதியடைந்த மடம் கிராமத்தில் அவரது சமாதி கோயில் தற்போது ஸ்ரீரமணாச்ரம நிதியுதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப் பட்டுள்ளது.*

*தொடர்பிற்கு: மடம் கிராமம் திரு. சுந்தரமூர்த்தி - 9942264556,*

*மடம் கிராமம் திருவண்ணாமலை-வந்தவாசி நெடுஞ்சாலையில் ஏந்தல் கிராமக் கூட்டுப்பாதையில் தெற்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. (தேசூர்-மடம் நெடுஞ்சாலைப் பாதை சுமார் 6 கி.மீ.)*

## படவேடு

### *காவ்யகண்ட கணபதி முனிவர்*

*திருவண்ணாமலை பாலசுவாமி, பிராம்மண சுவாமி என்று பத்தாண்டுகள் அண்ணாமலையில் பிரசித்த மடைந்தவரை 'பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி'' என பெயர் சூட்டி உலகிற்கு உதவி புரிந்தவர் காவ்யகண்ட கணபதி முனிவர். தவத்தின் உண்மைப் பொருளை உணர வேண்டிய இவருக்கு பால ரமணர்,*

*''நான்-நான்' என்பது எங்கேயிருந்து புறப்படுகின்றதோ அதைக் கவனித்தால் மனம் அங்கே லீனமாகும், அதுவே தபஸ். ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணுங்கால், மந்திரத்துவனி எங்கிருந்து புறப்படுகிறது என்று கவனித்தால் மனம் அங்கே லீனமாகிறது. அதுதான் தபஸ்''*

*என்று உபதேசித்தார். பின்னர் கணபதி முனிவர் திருவண்ணாமலையில் பல்வேறு இடங்களிலும், படவேடு, சென்னை-திருவொற்றியூர் மற்றும் பல இடங்களிலும் தவமிருந்து வந்தார். படவேட்டில் 'ரேணுகா கீதம்'' இயற்றினார். இங்கு ரிக் வேதத்திலிருந்து 'வீரட்' மந்திரம் கணபதி முனிவருக்கு கிடைக்கப் பெற்றது.*

*குறிப்பு: படவேடு திருவண்ணாமலை-வேலூர் நெடுஞ்சாலையில் போளூரையடுத்த சந்தவாசலிலிருந்து மேற்கே சுமார் 5 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஜமதக்னி முனிவர் தவம் செய்த இடம். சுற்றிலும் பற்பல சைவ-வைணவக் கோயில்கள் புராண வரலாறுகளுடன் உள்ளன.*

*குறிப்பு: மேலும் விவரங்களை ஆச்ரம வெளியீடான 'காவ்யகண்ட கணபதி முனிவர்' என்னும் நூல் காணலாம்.*

## வள்ளிமலை



*'வங்கார மார்பில் அணி' என்ற திருப்புகழை பழனியில் 1912இல் கேட்டவரை முருகனருள் அண்ணாமலைக்கு அழைத்து வந்து ரமண முருகக் காட்சியும் சேஷாத்ரி சுவாமிகளின் அனுக்ரகமும் பெற்று வள்ளிமலையில் திருப்புகழ் ஆச்ரமத்தை நிறுவி உலகெங்கும் திருப்புகழ் ஒக்கச் செய்தவர் சச்சிதானந்த சுவாமிகள். இவர் இரண்டு மாதம் பகவான் ரமணரிடம் திருப்புகழைப் பயிற்சி பெற்று அருணகிரி அருள் பெற்றவர்.*

*குறிப்பு: மேலும் இவரைப் பற்றிய விரிவான விளக்கம் ஆச்ரம வெளியீடான குஞ்சு சுவாமிகளின் 'எனது நினைவுகள்' என்ற நூருந்தும் அறியப் பெறலாம்.*

*குறிப்பு: வள்ளிமலைக்கு வேலூர் வாலாஜா ஆகிய இடங்களிருந்து நெடுஞ்சாலைப் பயணத்தில் சுமார் ஒரு மணி நேரத்தில் சென்றடையலாம்.*

*குரு வெளியிலும் உள்ளார்; உள்ளும் உள்ளார். வெளியிலிருந்து மனம் உள்முகமாகும்படி தள்ளுகிறார். உள்ளிருக்கும் குரு, மனத்தைத் தன் வசம் இழுத்து அதனை அமைதியாக வைத்துக் கொள்ள உதவுகிறார்.*

*இதுவே குரு கிருபை.*

*– பகவான் ரமணர்*

**குரு கிருபையை வேண்டி**

R. SELVARAJ
Contractor
P.Quilam Village & Post
Tandarampattu (TK)
Tiruvannamalai Dist

Advt

# செய்திகள்

## ஸ்ரீ ரமணாச்ரம செய்திகள்

### ஸ்ரீ சின்னஸ்வாமிகள் ஆராதனை

*ஸ்ரீ பகவானது இளைய சகோதரரும் ஆச்ரம முன்னாள் சர்வாதிகாரியுமான சின்ன ஸ்வாமிகள் என்று அன்பர்களால் அழைக்கப்பட்ட ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமிகளின் 58-ஆவது ஆராதனை விழா 19-1-2011 அன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அமைந்துள்ள அவரது சமாதியில் அனுஷ்டிக்கப் பெற்றது. பூஜை மற்றும் அபிஷேகத்தின் போது அன்பர்கள் அவர் மீது இயற்றிய பாடல்களைப் பாடினர். பூஜைக்குப் பின்னர் பெருந்திரளாகக் கூடியிருந்த அன்பர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப் பெற்றது.*

### ஸ்ரீ மஹா ருத்ரம்

*ஸ்ரீ மஹா ருத்ர ஜபம் ஆச்ரம புதிய ஹாலில் 20-2-2011 மற்றும் 21-2-2011 ஆகிய இரு தினங்களிலும் ஆச்ரம பாடசாலை, கோவை வேதபாடசாலை மற்றும் மணக்கால் வேதபாடசாலை வித்யார்த்திகள் மற்றும் ஆசிரியர்களால் சிறப்பாக ஓதப் பெற்றது.*

*21-2-2011 அன்று ஹோமம் மற்றும் சிறப்பு ஆரத்திகளுடன் ருத்ர ஜபம் விமரிசையாக நிறைவு பெற்றது.*

### ஸ்ரீ வித்யா ஹோமம்

*ஸ்ரீ வித்யா ஹோமம் ஆச்ரமத்தில் மார்ச் 18-ஆம் தேதி வெகு விமரிசையாக நடைபெற்றது. சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் மற்றும் ஜபங்களுடன் ஸ்ரீ சக்ர மேருவிற்கு பூஜை நடைபெற்றது. அன்பர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு அம்பாளின் பூரண அனுக்கிரகத்தைப் பெற்றனர்.*





*குறிப்பு-ஆச்ரம நிகழ்வுகள் அனைத்தும் வீடியோ மற்றும் புகைப்படத்தொகுப்புகளாககீழ்க்கண்டஆச்ரமஇணையதளத்தில் அவ்வப்பொழுது அன்பர்கள் கண்டு மகிழலாம்.*

**www.sriramanamaharshi.org**

## ரமண கேந்திரம், மைலாப்பூர், சென்னை

*அனேக ரமண அன்பர்களின் நீண்ட கால வேண்டுகோள் நிறைவேறும் வண்ணம் அலமேலுமங்காபுரத்தில் அமைந்துள்ள*

*சென்னை ரமண கேந்திரத்தில் பகவான் ரமணரது மூன்றடி உயரமும் 250 கிலோ எடையும் கொண்ட பஞ்சலோக சிலை ரமண அன்பர் திரு. என். எம். சுந்தரம் அவர்கள் காணிக்கையாக நிறுவி அதற்கான கும்பாபிஷேகத்தையும் நடத்தி வைக்க முன்வந்துள்ளார். இதற்கான ரூ. 3.65 இலட்சம் செலவு முழுவதையும் அவரே ஏற்றுக் கொள்ள முன் வந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இதற்கான மற்றைய அறிவிப்புகள் வரும் ஆராதனை அழைப்பிதழுடன் அறிவிக்கப்படும்.*

## ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம், பொள்ளாச்சி

*பொள்ளாச்சி கோட்டூர் மலையாண்டிபட்டணத்தில் அமைந்துள்ள இம்மையத்தினரால் கடந்த 2010-ஆம் ஆண்டு சேவை மையங்கள் மற்றும் திருமண விழாக்கள் சார்பாக ஆக 118 இயக்கத்தினருக்கு அக்ஷரமணமாலை பாடல் புத்தகம் மற்றும் பகவான் படங்கள் பல்லாயிரக்கணக்கில் விநியோகிக்கப்பட்டது பாராட்டுக்குரியது. இம்மையத்தினரால் இப்பகுதி வாழ் பள்ளி மாணவர்களுக்கு ஆன்மீக வகுப்புக்களும் அவ்வப்பொழுது நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு புனர்வசு நன்னாளிலும் ஆதரவற்ற சிறுவர் சிறுமியருக்கு அன்னதானமும் வழங்கப்படுகிறது.*

## ஸ்ரீ ரமண மந்திரம்

## பழனி

*ஸ்ரீ ரமண மந்திரம் பிரதிமாதம் 30-ம் தேதிகளில் மாலை 6 மணிக்கு பழனியில் ஸ்ரீ சாய் சதனில் அட்சர மணமாலை பாராயணம், தியானம், சொற்பொழிவு, ஆராதனை நடைபெறுகிறது.*

*தொடர்பு 9942327770*

## *ஸ்ரீ ரமணபதம் அடைந்தார். . .*

### திரு. அ.வெ.சுகவனேஸ்வரன்

*பகவானின் நீண்ட நாள் பக்தர்களுள் ஒரு முக்கிய இடம் வகித்தவர் திரு. அ.வெ.சுகவனேஸ்வரன் அவர்கள். மிகச் சிறந்த ஸமஸ்கிருத, தமிழ் அறிஞர் ஆன இவர் தம்முடைய 89ஆம் வயதில் பகவான் திருவடி சேர்ந்தார். பல நூல்களின் ஆசிரியரான் இவர் ரமணோதயத்திலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். தற்போது சிவானந்தலஹரியின் பாடல்களுக்கு விளக்கவுரை எழுதி வருகிறார். இவரது குடும்பமே பகவானிடத்தில் பற்றும் பக்தியும் கொண்டது. 1982-இல் தென்னக ரெயில்வே துறையில் தலைமை கனட்ரோலர் ஆஃப் ஸ்டோர்ஸாக ஒய்வு பெற்றது முதல் பல ஆன்மீக நூல்களை எழுதி வந்தார். இவரது மறைவு தமிழக ஆன்மீக பக்தர்களுக்கும், ரமண பக்தர்களுக்கும் பேரிழப்பாகும். இவர் பிரிவைத் தாங்கும் மனோபலத்தை இவர் குடும்பத்தாருக்கு பகவான் அளிப்பாராக.*

### இராஜபாளையம் சரஸ்வதி அம்மாள்

*பகவானின் சீரிய தொண்டரான இராஜபாளையம் ரமண அம்மாள் அவர்களுடன் அன்றைய காலங்களில் தனது 22-ஆவது வயதில் பகவானைத் தரிசிக்க வந்தவர் திருமதி. சரஸ்வதி அம்மாள் அவர்கள். அவர் பகவானைத் தரிசித்த முதல் அனுபவத்திலேயே பகவானால் ஈர்க்கப்பட்டார். தூரத்தே பக்தியில் பயந்த வண்ணம் நின்ற இவ்வம்மையாரிடம் பகவான் 'போய்க் குழந்தையைப் பாத்துக்கோ' என்று ஒன்றுக்கு இருமுறையாகக் கூறினாராம். அம்மையார் தனது இரண்டு வயதுக் குழந்தையை இராஜபாளையத்தில் விட்டு வந்திருந்தார். அதை உபதேசமாய் ஏற்ற அம்மையார் தனது குழந்தையை வளர்ப்பதையே கவனமாகக் கொண்டு பகவானின் பக்தியுடன் இராஜபாளையத்திலேயே தங்கி விட்டார். பிறகு ஒருபொழுதும் அவர் திருவண்ணாமலை வரவில்லை. இவருக்கு கண்ணுடைய*

*வள்ளலாரின் 'ஒழிவில் ஒடுக்கம்' மனப்பாடம். அதில் மிகவும் ஈடுபாடு உள்ளவர். அன்னாரின் ரமண பக்திக்குச் சான்றாக இராஜபாளையம் போகச் சொன்ன பகவான் தானே தமிழ்நாடு முழுவதும் ரமண ரத யாத்திரைக்குப் பின் இவரது இல்லத்தில் சிலையாகச் சென்றமர்ந்து விட்டார். இவரது இல்லமே இன்று இராஜபாளையம் ரமண கேந்திரமாகத் திகழ்கிறது. அன்னார் கடந்த 27-1-2011 அன்று தனது 86-ஆவது வயதில் ரமண பதமடைந்தார். இவரைப் பிரிந்து வாடும் திரு. லோகநாத ராஜா, (நிறுவனர், ரமணாலயம், இராஜபாளையம்) மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் 'ரமணோதயம்' ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## மன்னார்குடி ராஜம் ஐயங்கார்

*திரு. ராஜம் ஐயங்கார் அவர்கள் சீரிய ரமண பக்தர். தனது 95 வயதிலும் ரமணாச்ரமம் வந்து தங்கி பகவானின்பால் மிகவும் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்து வந்தார். இவர் கூடுவாஞ்சேரி ரமண பக்த சமாஜத்தில் நிறுவனர்களுள் ஒருவரான ரமண அன்பர் திரு. மாதவன் அவர்களின் தந்தையுமாவார். அன்னார் 10-12-2010 அன்று ரமண பதமடைந்தார். அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு 'ரமணோதயம்' ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## ஆர். ராமஸ்வாமி

*திரு. ஆர். ராமஸ்வாமி அவர்கள் ஸ்ரீ ரமணாச்ரம நூலகத்தில் கடந்த 20 ஆண்டுகளாக சேவை செய்து வந்த ரமண பக்தர். இவர் மிகவும் எளிமையாகவும் நகைச்சுவை உணர்வுடனும் வாழ்ந்து வந்த அன்பர். அன்னார் கடந்த 14 பிப்ரவரி 2011 அன்று ரமண பதமடைந்தார். இவர் பல புனைப்பெயர்களில் பல்வேறு பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்த எழுத்தாளருமாவார். அன்னாரைப் பிரிந்து வாடும் அன்பர்களுக்கு 'ரமணோதயம்' ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

**உன்னிடத்தில் ஒப்புவித்த உள்ளத்தால் எப்பொழுதும்**
**உன்னைக் கண்டு எல்லாம் உன்னுருவாய் - அன்னியம்இல்**
**அன்புசெயும் அன்னோன் அருணாசலா வெல்கும்**
**இன்புருவாம் உன்னில் ஆழ்ந்தே.**

*அருணாசலா! உன்னையே கதியாக நினைத்து -*
*யாவற்றையும் உன்னிடத்தில் ஒப்படைத்து -*
*தூய்மையான உள்ளத்தினால் எல்லா நேரத்தும் -*
*காணக்கூடிய அனைத்தையும் -*
*உன் சொரூபமாகக் கருதி -*
*உனக்கு அன்னியமாக எதையும் உணராது -*
*அன்பு செலுத்தும் உத்தம பக்தன் -*
*இன்பமே உருவான உன்னிடத்தில் ஆழ்ந்து -*
*பேரின்ப நிலை அடைவான்.*

*- ரமணர் அருளிய அருணாசல பஞ்சரத்னம்*

# பேரின்ப நிலை வேண்டி

# B.Rajagopalan
# Lalgudi

Advt

* பிறர் எவ்வளவு கெட்டவர்களாய்த் தோன்றினாலும் அவர்களை வெறுத்தல் ஆகாது. விருப்பு, வெறுப்பு இரண்டும் வெறுக்கத் தக்கன.

* பிரபஞ்ச விஷயங்களில் அதிகமாய் மனத்தை விடக்கூடாது. சாத்தியமானவரையில், அன்னியர் காரியத்தில் பிரவேசிக்கக் கூடாது. பிறருக்கு ஒருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்கிறான்.

- பகவான் ரமணர்

**பகவான் அருள் வேண்டி**

**பதம் பணியும்...**

L. Vijayalakshmi
No. 1/A, Rajamanikkam St.,
West Shanmugapuram Colony,
Villupuram - 605 602

Advt

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | | 24611397 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | ........... | 23612731 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | ........... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | ........... | 22244667 |
| **கூடுவாஞ்சேரி** திரு R. மாதவன் | ........... | 9940453553 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | ........... | 23716495 |
| **பெசன்ட் நகர், அடையார்** திரு P. பாலசுப்பிரமணியன் | ........... | 24915881 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | ........... | 24790635 |
| **குரோம்பேட்டை** K.L. சங்கர் | ........... | 22233432 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ........... | 9884355454 |
| **அண்ணாநகர்** U.V. பானு | ........... | 26287809 |
| **புதுச்சேரி** M.S. சந்திரசேகரன் | ........... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | ........... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | ........... | 9442004615 |
| **பொள்ளாச்சி** பாலசுப்பிரமணியம் | ........... | 9965622878 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | ........... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | ........... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | ........... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | ........... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | ........... | 9942264556 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.